ஃ:RANJITHA BODHINI.

ரஞ்சித போதினி

ஓர் மாதாந்தரத் தமிழ் பத்திரிகை.

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு---குறள்.

Editor: Tamil Bhushanum VASUDEO RAO GAEKWAR.

Vol. II.	MAY 1924	No. 4.
தொ. 2.	ரக்தாக்ஷி வரு வைகாசி மீ	ப. 4.

விஷயக் குறிப்புகள்.

கடவுள் வணக்கம் ... 121
தற்காலதேவையும்நீடியவாழவும் ... 122
காரைக்காலம்மையார் புராணம் ... 124
உருத்ராக்கம் பூணவேண்டியது ... 126
பார்த்திப சிவ பக்தி ... 127
அன்மானே புத்ரன ... 130
[illegible]குபாலகன் ... 132
[illegible]தன் சுந்தரி ... 134
பழையநாள் நினைவு ... 136
இல்லறதர்மம் ... 137
பழையனூர்நீலிவரலாறு ... 141
மல்லிகைப்பூ 143 ஹடயோகம் ... 145
அயலானை விரும்பேல் ... 148
வைகறைத் துயிலெழு ... 149
கல்வி 150 சாந்திவதி ... 154
சிறுவர்க்கான பக்கங்கள் ... 156
சுலோசனை 158 பஞ்சாங்கம் ... 160

Published by M. SAMBANDA MUDALIAR,
at the Manicka Vilasam Press,
12, Arunachala Mudali Street, MADRAS.

சந்தா விபரம்.

வருடம் 1-க்கு தபாற் கூலியுள்பட	இந்தியா, பர்மா, சிலோன் ...	0—14—0
	பினங்கு முதலிய வெளிநாடுகளுக்கு	1—4—0

சந்தாதாரர்கள் கவனிக்கவேண்டிய விஷயங்கள்.

(1) சந்தாதாரர்களாய் சேருகிறவர்கள் தங்கள் முழுவிலாசத்தையும் விபரமாய் எழுதியனுப்ப வேண்டும்.

(2) சந்தா தொகை அணா 14 ஐ முன்னதாக மணியார்டரில் அனுப்புவதே நலம். வீ.பி. மூல்யமானால் அணா 5 அதிகமாகும்.

(3) யர்ருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் அதேமாதம் 15ம் தேதி வரையில் பார்த்து அதற்குமேல் அம்மாதம் முடிவுக்குள் தெரிவித்தால் நாம் அதற்கு தக்க ரிபோர்ட் செய்யக்கூடும்.

(4) எந்த விஷயத்தைக்கொண்டு எழுதும் சந்தாதார்கள் சந்தா நெம்பரைக் குறித்து எழுதவேண்டும் இல்லாவிடில் கவனிக்கலாகாது.

(5) எந்த மாதத்தில் சந்தாதாரராய் சேர்ந்தாலும் மாசி மாதம் முதல்கொண்டு வருகிற தையீ முதல் சஞ்சிகைகள் அனுப்பப்படும்

மானேஜர், ரஞ்சித போதினி ஆபீஸ்,

நெ. 12, அருசலமுதலிதெருவு, மதராஸ்.

பொன் நிப்புபோட்டபவுண்டன்பேனா.

இப்பேனா அழகிய பொன்நிப்பு போட்டதும் நீண்டநாள் யாதொரு கெடுதலில்லாமல் எழுதக்கூடியதும் பார்வைக்கு மெத்த அழகுள்ளதாயுமிருக்கின்றன இப்பேனா ஒன்று வாங்குபவர்களுக்கு அழகிய பட்டு குட்டை 1-ம், சென்டுபாட்டல் 1-ம், நிக்கல் கிளிப்பு 1-ம் இனாம் கொடுக்கப்படும் விலை ரூபா 1-12-0.

எலக்டிரிக் பாக்கெட் லாம்பு.

இது ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதது இது வழிப்பிரயாணத்திற்கு மிகவும் அனுகூலமானது இது எந்த நேரத்திலும் வெகு சுலபமாக விளக்குஉபயோகப்படுத்திக்கொள்ளலாம்.
கம்பிளீட் பாட்டரியுடன் கண்ணாடி லென்சு பல்பு உள்பட விலை ரூ. 2-12-0.
தனி பாட்டிரி விலை. ரூ 1-0-0.

எம். ஆர். பாதர் அண்டு கோ.

நெ. 9. ஆறுமுகம் தெருவு சௌகார் பேட்டை, மதராஸ்.

உ

ஜோதிமயம்.

ரஞ்சித போதினி

ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—(தமிழ்மறை)

ஆசிரியர்: தமிழ்ப்பூஷணம் ஸ்ரீமான் - வீ. ஆர். கேய்க்வார்.

தொகுதி 2	ரக்தாக்ஷி௵ வைகாசி௴ 1924௵ மே௴	பகுதி 4

கடவுள் வணக்கம்.

கயவர்கள் எனும் வல்லூறுகளிக்கும்
காடு அணுகேல் தீது உகிர் உடல்தைக்கும்
மயல் மிகும் உலகர் வாழ்வு எனும் ஒட்டு இனை
மதியேல் அது மதிவன் சிறைபற்றும்
உயும் நெறியினர் ஆம் கிள்ளைகளுடனே
உயர் நூல் கற்பக தருவில் இருந்து
குயில் மணிமாடப் போரூர் இறையைக்
கூவாய் வர நீ கூவாய் குயிலே!

(இ-ள்) மக்களுள் பதர்கள் என்னும் கரிக்குருவி இன்பமுற்று உலாவும் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறிதலாகிய பலன்களைக்கொடுக்கும் ஐம்புலக் கூட்டை அணுகாதே, [அணுகுவாயாயின்] அவ்வல்லூற்றின் கொடிய நகங்கள் உடலைத்தைக்கும், மயக்க மிகுந்தவர்களான உலகினர் வாழக்கூடிய ஒட்டுவாழ்வினை பொருளெனமதிக்காதே, [மதிப்பாயாயின்] அது அறிவினைச் சிறைபடுத்தும் வலியபற்றாகும். [ஆகையினால்] அவற்றை ஒழித்து] உய்ந்து போம் நன்னெறியையுடைய அடியராகிய கிளிகளோடு கூடி நல்ல வேதாகமமென்னும் கற்பகத்தருவிலிருந்து, இரத்தினங்களிழைத்த தான மாளிகைகள் சூழ்ந்த திருப்போரூர் என்னும் தலத்திலெழுந்தருளிய கந்தபிரானைக்குயிலே நீ வரும்படியாகக் கூவுவாயாக.

குயிலே! [மனமே!] நீ கயவர்களென்னும் வல்லூற்றின் கண்களிற் படுவாயாயின் மீளாய், அவை பறவையினங்களைக் கொல்லும் வலிமையையுடையன, உனக்கு அத்தகைய வலிமையின்மையினால் கயவர்களென்னும் வல்லூற்றின் தீது உகிர் உடல் தைக்கும் காடு அணுகேல் என்றும், எனது வாழ்க்கைக்கு உரியவரோடு செல்வேன் எனின், இது மடமையேயாகும் ஏனெனின் இல்வாழ்க்கையரும் உன்னுடன் வருந்துணையாவரோ? 'மனையாளும் மக்களும் இனமான சுற்றமும் சுடுகாடுபட்டே' யாதலினால் அவர்கள் பொருள் பற்றுள்ளவரையே ஒட்டிவாழ்வர். அப்பற்று ஒழிந்தால் வாழ்வரோ? வாழமாட்டார். அன்றிமதிப்பரோ? மதியார். இதை நீயறிவாய் ஆதலால் உலகர் வாழ்வு எனும் ஒட்டினை நீ மதியேல் என்றும், நான் கூறியதை மறந்து அம்மயக்கில் மயங்குவாயாயின் அது உன்னைச் செல்லவும் ஒட்டாது, சிறையில் வைக்கும், அறிவை மயக்கும் ஆதலால் அது மயல் மிகும் மதிவன் சிறைபற்றும் என்றும், இனி நீ அவர் பற்றை ஒழித்து உயிர்போம் காலத்து உற்றதுணையாகிய பொன்னம்பலக்கூத்தனை நாடிச்செல்லும் அன்பு நெறியில் தலைப்பட்ட சுகவான்களோடு கூடிக்கலந்து இறைவன் நூல் என்னும் விருக்ஷத்திலிருந்து அவரோடு நீயும் அழைப்பாயாயின் எம்பெருமான் விரைந்து வருவான் ஆதலால் உய்யு நெறியினராய் கிள்ளைகளுடனே உயர் நூல் கற்பகத்தருவிலிருந்து போரூர் இறையைக் கூவுவாய் எனவும் கூறினார்.

பத்திரிகாசிரியர்.

ரஞ்சிதபோதினி

ஓர் மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

சென்னை, ரக்தாக்ஷி௵ வைகாசி௴

1924௵ மே௴

தற்கால தேவையும் நீடிய வாழ்வும்.

நமது நாடு தற்காலம் இருக்கும் ஸ்திதியினை யனுசரித்து நாம் நடந்துக்கொள்ளவேண்டியவைகளைக் கடைப்பிடித்து ஒழுகவேண்டுமென்பது நாம் ஒவ்வொருவருமே யறிந்ததன்றோ? நமது தற்காலத் தேவையென்ன? நமது சந்ததியார்கள் நீடிய சுகவாழ்வு வாழ்வது எப்படி? பூர்வகாலத்து நாகரீகமுடைய கல்வியையும், ஆசார அநுஷ்டானங்களையும், நடை நொடிபாவனைகளையும் அநுசரித்து அவற்றைக் கொள்ளவேண்டும். அதை யொழித்ததால் ஏற்பட்ட துன்பங்கள் நமக்கு தற்காலம் வறுமையாய் முடிந்தது. நமது வறுமையைப்

போக்கிக்கொள்ள வேண்டுமானல் நாம் நம் நாட்டு நவீன நாகரீகத்தை யொழித்து பூரணகல்வியையநுசரித்துத்தான் ஆகவேண்டும்? 'பழியன கழிதலும் புதியன புகுதலும், வழுவனகால வகையினனே' என்னும் சூத்திர விதியையநுசரித்து நடந்துகொள்வதுதான் மிக்க நன்மையைப்பயக்கும். இன்றேல் கெடுதியையே அநுபவிக்கவேண்டி வரும். தற்காலம் நமது நாட்டுக்காகப் பாடுபடுவதாகக்கூறிக்கொண்டு திரிபவர்களின் எண்ணமும், வார்த்தையும் வெவ்வேறுவிதமாகக்காணப்படுவதினல் பல இடையூறுகள் ஏற்பட்டுக்கொண்டிருப்பதைப் பிரத்தியட்சமாகக்காணநேரிடுகின்றது. ஆகையினல் இத்தகைய பிரயோசனமற்ற முயற்சியைக் கைக்கொள்வதைக்காட்டிலும் நமது சந்ததியார்களுக்குதக்க கல்வியை போதித்து நமது நாட்டுப்பழக்கவழக்கங்களைப்போதித்து அவர்களைப்பூரண அறிவாளிகளாக்கி வரவேண்டுவதேசிறந்தவழியாகும். அதையொழித்து நவீனநாகரீக முறைகளிற்புகுத்தி நவீனநாகரீக உணவுகளை யுண்ணப்பழக்குவித்து நவீன நாகரீகத்துச் சோம்பேறிகளாக்குவதோடு வாய்ப் பறையறைந்து வருவதினல் நாட்டின் முன்னேற்றம் கெட்டுப்போவதோடு தீமையே மிகுந்துவிடும். அறிவாளிகளாயுள்ளோர் ஒவ்வொரு விஷயத்தையும் ஆய்ந்தோய்ந்துபார்த்துச் செய்ய வேண்டியவைகளைச் செய்தும் ஒழிக்கவேண்டியவைகளை யொழித்தும் நன்மையை கடைப்பிடிக்கவேண்டும். தற்காலம் நமது நாட்டிற்கு நன்மையையே செய்வதாய்க்கூறும் தலைவர்களில் பலர் ஒற்றுமையுடனிருக்கின்றார்களா? சமநோக்குடையவர்களா யிருக்கின்றார்களா ? அப்படியிருப்பது உண்மையானல் நம் நாடு தற்சமயம் எத்தகைய ஸ்திதியிலிருக்கவேண்டும். முக்கியமாய் மனிதர்களாயுள்ளவர்கள் கைக்கொள்ள வேண்டிய தென்னவெனின், நிதானம். அதுதான் உலகில் பிரதானம். அஃதொழிந்தால் அவனை ஹீனத்வமுடையவனென்றே உலகம் பழித்துக் கூறும்.

நண்பர்களே ! முதலில் நாம் நம் சந்ததியாருக்கு இனி கற்பிக்கப்படவேண்டிய விஷயங்களை ஒருவாறு சுருக்கிக்கூறுகிறேன்.

[1] திடமதியுண்டாக்க கூடிய கல்வி.

[2] எந்தகாரியத்தையும் நிதானத்துடனும் பொறுமையுடனும் முடித்தற்கான முயற்சி.

[3] பூர்வ ஆசார அநுஷ்டானமுறை.

[4] சுவதேசத்தில் விளையும் வஸ்துக்களைக்கொண்டு நூதனமானவைகளைச் செய்யக்கூடியதான கைத்தொழில் முறை.

[5] விவசாயம் இது முக்கியமாய் நம் நாட்டுச்சிறுர்கள் ஒவ்வொருவரும் அறிந்திருக்கவேண்டியது]

[6] வர்த்தகம் இதுவும் பொய்கலப்பில்லாத தருமநெறி பரந்த முறையினதாயிருத்தல் வேண்டும்.]

[7] ஏழைகள் முதலியவர்களுக்குத் தம்மாலியன்ற அளவு இல்லை எண்ணாது கொடுக்கும் உதாரணகுணத்தை அடையவேண்டும்

[8] ஒற்றுமையாய் வாழ பழகுவிக்க வேண்டும்.

[9] தங்கள் தங்கள் வீடுகளின் முன்புறத்தில் புறந்திண்ணைகள் அமைத்து வருவார், போவார், வழிப்போக்கர் முதலியவர்கள் இளைப்பாறும்படி செய்யவேண்டும். (இதனால் தற்காலம் சிறைச் சாலையைப்போல் இரும்புக்கம்பிகள் போடப்பட்டிருப்பது கூடாது. ஏனெனில் அது முதல் அவலட்சணம் என்பதைக் கூறவும் வேண்டுமோ? ஆனால் இதில் சிலருடைய கொள்கை யென்ன வெனின், வழிப்போக்கர்களாய் வருவார்கள் அயர்ந்து மறந்து இருக்கும் சமயங்களில் அகப்பட்டதை சுருட்டிக்கொண்டு ஓடிப்போவதாய்க் கூறி விடுகின்றனர் அது பிசகு. அப்படிக்கூறுவது மதியீனம். நாம் ஜாக்கிறதையுடன் வாழவேண்டியே கள்ளர்கள் திரிகின்றனர். இதனால் ஒருவிதமனிதனைப்பற்றி யுலகத்திலுள்ளவர்களுக்கு நாம்கெடுதி செய்யப்படாது.

[10] பெற்றோர்களிடம் அன்பாய் நடந்துக்கொள்ளவும் அவர்களை போஷிக்கவும் அறிவிக்கவேண்டும்.

[11] பந்துக்களிடமும் சிநேகிதர்களிடமும் விசுவாசமாயிருக்கப்பழக்கவேண்டும்.

[12] தெய்வபக்தியிலீடுபட்டு சன்மார்க்கநெறியில் வாழும்படி பழக்கப்படுத்தவேண்டும்.

இன்னும் விவரித்தெழுதலாமெனில் பெருகுமாதலால் இதுவரை சுருக்கி கூறினம் மறுமுறையும் சமயம் நேர்ந்துழி வரைகுதும்.

ஓம்தத்ஸத்,
பத்திரிகாசிரியர்.

பூதவதி அல்லது புனிதவதி
என்னும்

காரைக்காலம்மையார் புராணம்.

(முன் தொடர்ச்சி.)

20. இல்லாளன் வைக்கவெனத்தம்பக்கன் முன்னிருந்த
நல்ல நறுமாங்கனிக ளிரண்டினி லொன்றைக்கொண்டு
வல்விரைந்து வந்தணைந்து படைத்து மன மகிழ்ச்சியினால்
அல்லறீர்ப்பவடியார் தமையமுது செய்வித்தார்.

(இ--ள்) இல்லுக்குடையவனும் தலைவனுமாகிய மணாளன் வைக்கும்படியாகக் கொடுத்தனுப்பியதும், தன்னருகிலுள்ளதுமாகிய நல்லதும் நறுமணமும் உருசியுமுடையதுமான மாங்கனிகள் இரண்டில்

ஒன்றையெடுத்து வேகமாகவைத்து அடியாருக்குப் படைத்து மன மகிழச்சி கொண்டவளாய் துன்பங்களை யொழித்து இன்பத்தை யளிப்பவராகிய சிவபெருமானது பக்தன் யுண்பித்தார். இதில் படைத்து மனமகிழ்ச்சியினுல், என்னும் அறப்பயனை முற்று முணர்ந்த புனிதவதியம்மையார் ஈந்து வந்ததை விளக்கினர். ஈதன் மாகூியைப் பின்வருஞ் செய்யுட்களால் அறிவிக்குதும்.

"ஈத்துவக்கு மின்பமறியார் கொறுமுடைமை
வைத்திழக்கும் வன்கண்ணவர்"–133 என்றும்,
"சாதலினின்னுதலில்லை யினிததூஉ
மீதலியை யாக்கடை"–134 என்றும்,
"நல்லா றெனினும் கொளறீது மேலுலக
மில்லெனினு மீதலே நன்று" 135 என்றும்,
"அற்றா ரழிபசி தீர்த்தலஃதொருவன்
பெற்றுள் பொருள் வைப்புழி"–136 என்றும்,
"ஆற்று நர்க்களிப்போ ரறவிலைபகர்வோர்
ஆற்றுமாக்களரும்பசிகளைவோர்
மேற்றேயுலகின் மெய்ந்நெறிவாழ்க்கை
மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம்
வண்டிகொடுத்தோருயிர் கொடுத்தோரே"—137 என்றும்,
எதனுல் தானஞ்செய்ய வேண்டு மெனின்,
"இளமையு நில்லா யாக்கையு நில்லா
வளவியலான் பெருஞ் செல்வமு நில்லா
புத்தேளுலகம் புதல்வருந்தாரார்
மிக்கவளமே விழுத்துணையாவது
தானஞ் செய்யென——" 138 என்றும்,
"முருந்தனைய தூமுறுவன் முற்றிழையார் சேரி
யிருந்திளமை கள்ளுண்டிடை தெரிதலின்றிக்
கருந்தலைகள் வெண்டலைகளாய்க்கழியா முன்னே
யருந்தவமுந் தானமு மாற்றுமினே கண்டீர்–139- என்றும்,
"உடற்றும் பிணித்தீயுடம்பினுயிர் பெய்திட்
டடுத்துணர்வு நெய்யாக வாற்ற றுவையாகக்
குடித்துண்ணுங் கூற்றங்குடில் பிரியா முன்னே
கொடுத்துண்மின் கண்டீர்குணம்புரிமின்கண்டீர்–140 என்னும்,
"கருங் கூந்பிறப்பினல்லால் வலம்புரி காணுங்காலைப்
பெருங்குளத்தென்றுந்தோன்றா பிறைநுதற் பிணையனிரே
யருங்கொடைத்தானமாய்ந்த வருந்தவந்தெரியின் மண்மேன்
மருங்குடையவர்கட்கல்லான்மற்றையர்க்காவதுண்டோ'-141என

133, 134, 135, 136 திருக்குறள், 137, 138, மணிமேகலை 139, 140, 141 சிவகசிந்தாமணி

" அட்டு நீரருவிக்குன்றந்தல்லது வயிரந்தோன்று
குட்டநீர்க் குளத்தினல்லாற் குப்பை மேற்குவளைபூவா
விட்டுநீர் வினவிக் கேண்மின்விழுத்தகை யவர்களல்லாற்
பட்டதுபகுத்துண்பாரிப்பார் மிசையில்லையன்றே,,-142 என்னும்

" நரம்பொலிபரந்த கோயினன்னுதன்மகளிர் தூவும்
பெரும்பலிச் சோற்றினீதல் பெரிதரொகு மேனும்
சுரும்பொலி கோதையார்த மனைவயிற்றுண்டோறாட்டு
மரும்பலியனைத்து மீயினது பொருட் குன்றுகண்டீர்,,- 143
என்னும்,

" ஆற்றவர் வருத்த நீக்கி யாருயிர் கொண்டு நிற்குந்
துற்றவீழீதல் செம்பொற்றுறக்கத்துக்கேணியாகு
முற்றுயிரோம்பித்தீந்தே னூகனுடு னறப்பின்யார்க்கு
மற்றுணர்யில்லை மண்ணும் விண்ணுறும் மடியவன்றே"--144
என்றும்,

" மாசித் திங்கண் மாசின சின்னத்துணிமுள்ளி
னூசித்துன்ன மூசியாடையுடையவகாப்
பேசிப்பாவாய் பிச்சையெனக்கையகலேந்திக்
கூசிகூசி நிற்பர் கொடுதுண்டறியாதார்'' —145 என்னும்,

141, 142, 143, 144, 145 சீவகசிந்தாமணி

(தொடரும்.)
வா. ரா. கேய்க்வார.

ருத்திராக்கம் பூணவேண்டியதவசியமே.

[89 ம் பக்கத் தொடர்ச்சி.]

வசிஷ்டர் எம் பெருமானை நோக்கி ருத்திராக்ஷதாரணம் எவ்விடத்தில் சொல்லப்பட்டிருக்கிறது, எந்த மந்திரத்தால், எந்த பாவனையால் தரிக்கவேண்டும்; எவர்கள் தரிக்கலாம்: தரித்தாலுண்டாகும் பலலென்ன என்று கேழ்க்குங்கால், எம்பெருமான் கூறினதாவது:— முனியே; சொர்னத்தாலாவது, வெள்ளியினுலாவது; கட்டப்பட்ட ருத்திராக்ஷத்தை, சிகை, கர்னங்கள், எக்ஞசூத்திரம், கை, கண்டம், வயிறு, இவைகளில் ஏதேனும் ஓரிடத்தில் ஸ்ரீமத் பஞ்சாக்ஷரம் பிரணவம் ஆத்ம மந்திரம், இவைகளில் ஏதேனு மொருமந்திரத்தால் பக்திமானுயுள்ள மனிதன் வணக்கமாய் சந்தோஷத்துடன் தரித்துக் கொள்ளவேண்டும் என்று கூறினதாக வாசிஷ்டலைங்கத்தில் காணப் படுகின்றன.

சிகையிலிருக்கிற ருத்திராக்ஷத்தை பிரம்மமாகவும், இரண்டு காதுகளிலிருப்பன பார்வதி பரமசிவமாகவும், பூணுலிலிருப்பதைத்

தேவர்களாகவும், கைகளிலிருப்பன திக்குகளாகவும், கழுத்திலிருப்பதைச் சரஸ்வதிதேவி அக்கினிபகவானுகவும், பாவிக்க வேண்டுமென்று சாஸ்திரங்களில் காணப்படுகின்றன.

ருத்திராக்ஷதாரணமானது சாக்ஷாத்சிவஞானத்துக்கு அடையாளமானது.

ருத்திராட்சதாரணத்தினுலேயே சகலபாவங்களிலிருந்தும் விடுபடுகிறுன். ஆனல், இவனல் சாப்பிடப்பட்டது ருத்திரனல் சாப்பிடப்பட்டதாகிறது. இவனுல் முகரப்பட்டது சிவனுல் முகரப்பட்டதாகிறது.

இதைக் கண்ணுரும் எனது அன்பு நிறைந்த சகோதரர்களே நாம் இதன்படி நடந்து கொள்ளவேண்டியது முக்கியமே ஒழிய படிப்பதும், எழுதுவதும், பெரிதல்ல. நாம் எழுதினுலும், படித்தாலும் அதன்படி நடந்து கொள்வது தான் முக்கியமான கடமை.

சுபம் ! சுபம் ! சுபம் !

A. S. T. மஹராஜ்
திரவிய பட்டணம் சுரண்டை.

பார்த்திப சிவபக்தி.

(முன்பக்கத் தொடர்ச்சி,)

அர்ச்சுனன்:--கைலேமலேயில் வசிக்கும் முக்கண்ணனேக் காண வேண்டித்தவம் புரிகின்றேன் இந்திரன்:---(நகைத்து)உன்னேப்பார்த்தால் ராஜவம்சத்தில் பிறந்த இளங்குமரன் போலிருக்கிறதே, உன்னுடைய சரீரத்தை ஏன் கெடுத்துக்கொள்ளுகிறுய். முற்றிலும் துறந்த முனிவர்களுக்கே காணக்கூடாதவராய் இருக்கின்ற திரு நீலகண்டனே உன்னல் காணக்கூடுமா. என்னுடைய வார்த்தையை குருவாக்கியமாக எண்ணிக்கொண்டு, உன்னுடைய நாட்டிற்குச் சென்று சுகமாய் வாழ்வாயாக.

அர்ச்சுனன்;---சிவபிரான் பக்தவத்ஸலா செருப்பாலுதைத்த கண்ணப்ப நயனுருக்கும் தன்னேயே அடைக்கலம் என்று நம்பி இருந்த மார்க்கண்டனே காலபாசத்திலிருந்து நீக்கி அவனுக்கு முக்தியைக்கொடுத்தும், ஆபத்திற்காக வேண்டி மரத்தில் ஏறிய ஒருவனுக்கு, அவனே யரியாமல் தன்மேல் உதிர்ந்த வில்வதளத்தைக்கண்டு அவனுக்கு முக்தியளித்த சிவபிரான் தன்னுடைய பக்தர்களுக்கு முக்தி அளிக்காமல் இரார். ஆகையால் எனது உடல் அழிந்தாலும் சரி, அல்லது எனக்கு வேறு இக்கட்டுகள் நேர்ந்தாலும் சரி, நான் அவரைச்சந்தித்து, அவரிடமிருந்து வரம் பெற்றுதான் திரும்புவேன் என்றுன்.

அதைக்கண்ட இந்திரன் அகமகிழ்ந்து நீ எதைக்குறித்து தவம் செய்கின்றுயோ அதை அடை.வாயாக என வரம் அளித்து, தன்னு

டைய சுயரூபத்தை காண்பித்துவிட்டு அந்தர்தியானமாயினர். பிறகு அர்ச்சுனன் தனது சித்தத்தை சிவபிரானிடத்தில் வைத்து ஐந்து வருஷகாலம் தவம்புரிந்து கொண்டு வந்தான்.

இதையறிந்த நாரதமுனிவர் துரியோதன மகா ராஜனிடம் சென்று, வியாசமகாமுனிவர் பாண்டவர்களைச் சந்தித்தது முதல் அர்ச்சுனன் பாசுபதாஸ்திரத்தைப் பெறவேண்டி தவம் புரிந்து கொண்டு இருக்கும் வரையில் சாங்கோபாங்கமாகத் தெரிவித்தார். இதைக்கேட்ட துரியோதனன் மனத்தில் திகில்கொண்டு தன் தோழனாகிய மகாசூரனைவரவழைத்து அர்ச்சுனன் பாசுபதாஸ்திரம் பெற சிவபிரானைக் குறித்து தவம்புரிதலைக்கூறி அவனைக்கொன்று வர ஆஞ்ஞாபித்தான்.

இப்படியாக துரியோதன மஹாராஜன் கட்டளை இடவே மகாசூரன் அர்ச்சுனன் தவக்கோலத்துடன் இருக்கும் இடத்திற்குச் சென்று, அவனைக்கொல்லுவதற்காக, (பன்றி) உருவங்கொண்டு அருகாமையிலுள்ள கானகத்தில் ஒளித்துக்கொண்டு இருந்தான்.

இதனை ஞான திருஷ்டியினால் அறிந்த சிவபிரான் அர்ச்சுனனிடத்தில் திருவிளையாடல் செய்ய நினைத்து. அவனுக்கு முக்தியளிக்க உத்தேசித்து, தனது ஆருயிர் தலைவியாக இருப்பவளாயும், பராசத்தியாய், விளங்குவளாயும், ஆறுமுகங்களையும், அழகிய வேலாயுதத்தை ஏந்தியவளாயுமுள்ள ஸ்கந்தரையும், மூஷிகவாகனராயும், மோதகப்பிரியராயுமுள்ள கணேசரையும் ஈன்றலோகமாதாவாகிய உமாபிராட்டியாரை வேடுவப்பெண் உருவங்கொண்டு தன் முன்னேவர ஆஞ்ஞாபித்து தனது பக்தனையும், தனக்கு தொண்டுகள் புரிந்து வரும் திருநந்திதேவரை வேடுவனாக வரச்செய்து, பின்னும் மற்றவறை வேடர்களாக தனக்கு பின்னே வரச்செய்து தான் அவர்களுக்கு தலைவராக வேடரூபங்கொண்டு பன்றி வேட்டையாடிக்கொண்டு கடைசியில் பகாசூரன் பன்றி உருவங் கொண்டிருக்கும்படியான இடமாயும், அர்ச்சுனன் தபசு செய்து கொண்டு இருக்கும்படியான இடத்திற்கு வந்து சேர்ந்தார்.

இதை அறிந்த பகாசூரன் பின் வருமாறு ஆலோசிக்கலானான் நான் அஸ்தினாபுரிமன்னன் துரியோதனமகாராஜாவினால். அர்ச்சுனனை வதம் செய்யும் பொருட்டு அனுப்பப்பட்டு, அர்ச்சுனனைக் கொல்ல சமயம் பார்த்துக்கொண்டு .இருக்கின்றேன். அப்படி இருக்க நான் இப்பொழுது வேடுவரால் சூழப்பெற்று இருக்கின்றேன் வேடுவரிடத்தில் தப்பித்துக்கொண்டு ஓடிப்போனால் என் இனத்தினர்கள் என்னை ஏளனம் செய்வார்கள் தவிர நான் துரியோதன மகாராஜவுக்கு அர்ச்சுனனைக் கொல்லுவதாக வாக்குத்தந்துவிட்டு இப்பொழுது அவனைக்கொல்லாமல் இவர்களுக்குப் பயந்துகொண்டு போனால் நான் துரியோதன மகாராஜனுக்கு துரோகம் செய்தவனா

வேன், ஆகையால் நான் இவர்களிடம் தப்பித்துக்கொண்டு போவதைவிட, அர்ச்சுனனைக்கொன்று, துரியோதன மகாராஜனுக்கு உத்சாகம் உண்டாகும்படி செய்து அவனிடம் சம்மானம் வாங்குவேன் அல்லது அருச்சுனனைக் கொல்லுவதற்கு, அவன் மேல் பாயும்போது அவ்வேடுவர்களால் கொல்லப்பட்டால் நான் வீரசுவர்க்கம் அடைகிறேன்" என்று எண்ணினவனாய் அர்ச்சுனன் மேல்பாய காற்றிலும் வேகமாக ஓடினான். இதை யரிந்த சிவபெருமான் தன்னுடைய வில்லைக்கையில் பிடித்து வில்வளைத்து அஸ்திரப் பிரயோகம் செய்தார்.

தன்னை நோக்கிவரும் பன்றியைப்பார்த்து அர்ச்சுனன் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டு தனது காண்டீபத்தை வளைத்து அஸ்திரப்பிரயோகம் செய்தார். சிவபெருமான் தொடுத்த பாணமானது அதன்பின்புரத்தில் தாக்கி அதனுடைய முகத்தின்வழியாக ஊடுருவிப்பாய்ந்தது. அர்ச்சுனன் தொடுத்தகணையோ முகத்தில் பட்டு பின்புரத்தில் ஊடுருவிப்பாய்ந்தது. உடனே பகாசூரனாகிய பன்றி உலகம் நடுங்க ஓலமிட்டுக் கொண்டு விண்ணுலகமெய்தினன். பன்றி மாண்டதும் அர்ச்சுனன் தன் சித்தத்தை சிவபிரானிடத்து வைத்துத் தவம்புரிய யத்தனம் செய்தனன். அப்படி இருக்கும் சமயத்தில் முப்பத்தி முக்கோடி தேவர்களான, வேடுவர்கள் அர்ச்சுனனைச் சூழ்ந்துக்கொண்டு ஏசினர்கள்.

வேடர்கள்:---ஐயா! தபசியாரே! எங்கள் தலைவன் குறிவைத்து எய்த பன்றியை நீர் ஏன் கணைதொடுத்தீர் ஒரு வேடன் குறிவைத்து எய்யும் வஸ்துவை மற்றவன் யெய்யக்கூடாது என்பது உமக்குத் தெரியாதோ ஏன் இப்படி தபசிபோல் நடிக்கிறீர்.

அர்ச்சுனன்:--- ஒரு மனிதனுக்குப் பிராணம் பெரியது அல்லவா? ஆகையால், நான் என் உயிரைக் காப்பாற்றும் பொருட்டு அதை எய்தேன் தவிர அது என்னைக்கொல்வதற்காக, என்னை நோக்கிப் பாய்ந்தது நீங்கள் சொல்லுகிறபடியே உங்கள் தலைவன் யெய்ததாக இருக்கட்டும் உங்கள் தலைவன் எய்த இடத்தில் தானே அது இருக்க வேண்டும். அப்படி இல்லாமல் அது என்னை நோக்கி வருவானேன் போம்! ஐயா, போம்!! உங்களை யார் கண்டார்கள் உங்கள் தலைவனை யார் கண்டார்கள்.

வேடன்:--- நாங்கள் வெகுதூரத்திலிருந்து அந்தப் பன்றியை துரத்திக்கொண்டு வந்து இவ்விடத்தில் கணைதொடுத்தோம் நாங்கள் தொடுத்தபிறகு நீங்கள் ஒரு கணை தொடுத்தீர் நாங்கள் உங்களுக்கு முன்னால் தொடுத்தகுறியும் இருக்கிறது (பன்றி இறந்து இருக்கும் இடத்துக்குப் போய்) பார்த்து அதோ! பாரும் நீங்கள் தொடுத்த பாணமானது முகத்தில் பாய்ந்து பின்புரமாக ஊடுருவியிருக்கிறது தவக்கோலத்துடன் இருக்கும் நீங்கள் தவத்தைக்கருதாது இந்தவித

மான சிற்றின்பத்தில் ஏன் வந்தீர் நீங்கள் தவத்தையல்லவா முக்கியமாகக்கைக்கொள்ளுதல் வேண்டும் தவிர தபசிகளுடைய முக்கிய கொள்கை அஹிம்சாபரமோதர்மம், ஜீவகாருண்யம் அப்படியிருக்க நீங்கள் ஜீவஹிம்சை செய்து விட்டீர்களே, உங்களைப்பார்த்தால் போலிதபசிபோலல்லவா விளங்குகிறது. (தொடரும்,)

B. S. வெங்கடராமன், கோயமுத்தூர்.

ஆன்மாவே புத்ரன்.

" கடந்த ஞானியும் கடப்பரோதம்
மக்கட் மேற்காதல் "

என்றபடி, உயிருடன் பரிகொடுக்கலானதால் புத்திரசோகத்தினால் வருந்தும் அந்தணர் ஒருவர் ஞாநியும் பெருந்தகையோருமாவர் ஆயினும் அவர்,

" தாழ்வது வந்தபோது தளர்வரோ
தக்கோர் மிக்க
ஊழ்வினை வந்ததானல் ஒருவரால்
விலக்கப்போமோ "

என்றபடி, பிரகிருத நிலைமையையும், தம் ஊழ்வினைப் பயனையும் நினைந்து, ஸ்ரீ ராமச்சந்திரபரமாத்மாவையே நம்பி, நிகழுங்காரியங்களை யெல்லாம் அந்தபகவானுக்கே அர்ப்பணம் பண்ணிக்கொண்டு வரும் நாளில் ஒரு நாள் தம்முயிரையே கொள்ளையாகக் கொடுக்கலானதைக் கண்டு, மனஞ் சகிக்காமல் துன்பக்கடலிலாழ்ந்து, மிக வருந்தி " ஐயோ ! உலகமின்ன தென்றறியாத இளம் வயதுள்ள பாலகனைக் கெடுத்தானே பாவி ! நம்பியன்றோ மோசம் போயினேன் ! மருந்தோ, மாயமோ, சூதோ, வாதோ, சொக்குப் பொடிதானோ இளைஞன் மனமுரிந்து போகும் வண்ணம் பிரயோகித்தானே சண்டாளன் ! பச்யதோஹரன்' போலன்றோ விழித்தகண் விழித்தபடிக்கிருக்கும் கண்களில் மண்ணைவாரித்தூவியே மாற்றிச் சென்றனன் துரோகி ! துர்ப்போதனைகளும் தலையணை மந்திரோபதேசமும் கூடச்சேர்ந்தன, நெருப்புப் பற்றி எரிய காற்றுங்கூடினாற்போல்—என்னசெய்வேன் ! மூவைந்து வருஷங்களாய் அனர்த்த பரம்பரைகள் ஒன்றின் பின்னொன்றாய் இல்லிற்கிசைந்த செல்வியே போனது முதல் சம்பவித்துக் கொண்டேயிருக்கின்றனவே ! பெற்ற மக்களில் குழியிற்கிடத்தினது போக எஞ்சிய பெண்மணிகளிருவருக்கும் நடுநாயகம்போல் விளங்கிக்கொண்டு அபரவயதுகாலத்திலேறும் குருடன் கோலைப் போலவுதவுவாவென்றிருந்ததற்கு மாறாகவன்றோ விளைந்தது ! துரோகியின் நயவஞ்சகமாம் செயலை என்னென்பேன்

முதன் மணியாம் கண்மணி தன்னிருகுஞ்சுகளுடன் வந்த வழியே நோக்கினன், கடைமணியோ என்பூர்வவினைப்பயனால் அவக்கோல மாயினள். ஆயினும் மன உருதியையும் ஊக்கத்தையுங் கொண்டு பாவியின் வஞ்சகத்தைக் கண்டு ஓட்டலாயினன். அவனது நன்னூல் காலக்ஷேபமே அநித்தியபதியை யிழக்கலானதையுஞ் சிறிதும்பாராட்டாது நித்தியபதியாம் ராமச்சந்திரபரமாத்மாவின் பாதாரவிந்தத்தையே கருதி, தர்க்காத்துக்கொண்டு, இப்பரவயதைக் கடத்திக்கொண்டிருக்கும் பெற்றதந்தையைக் காத்துவர காரணமாயிற்று, "நடுநாயகமாய்க் கருதியிருக்கும் செல்வன்பாடோ சீர்கேடாயிருந்து வருகின்றது. நல்லபெண்ணையாகிலும் தேடிக் கொணர்ந்து மணமுடித்து பழிக்காரவஞ்சகப்பாவியால் மயக்குற்றிருக்கும் புதல்வனைச் சீர்திருத்தியாகிலும் அண்ணனது குடும்பத்தை வகித்து, கிழவனைக் காத்துக்கொண்டு நித்தியபதியை வேண்டிக்கொண்டன்றோ காலம் போக்கக்கருதுகின்றனன் கடைநாயகமாம் நன்மணி. அந்த கடைநாயகமணியின் கானவொலியேயன்றோ வீணையின் நரம்புகளினிடையேயிருந்தெழும் இன்பகரமான வொலியைப்போல் முல்லைபரும்பனைய அழகிய பற்களினிடையில் கனிந்து, கனிகள்போன்ற சிவந்த உதடுகளின் வழியாய் வரும் அமுதமயநாதத்தைக்கேட்டன்றோ தந்தையின் பாரமாய்ப்பெருகி நிற்கும் துன்பம் ஒருவாராய்த் தணியவிருக்கின்றது. இனியாகிலும் நடுநாயகமுதனாயகமாய் வந்து பொருந்துமோ! முதன்மைபான நன்மணியாய் வந்து பொருந்தாவிடில் இன்பகரத்திரு மண்பந்தலில் நற்கலவைச்சந்தனத்தேன்மாரி பொழிவதில்லைதான். இந்தபாபத்திலீடுபட்டிருக்கும் முதலிரண்டு மூன்று நான்கு சண்டாளர்களும் படு குழியில் தான்வீழ்ந் தழிவார்கள் திண்ணம்.

III

ஐயோ! இவ்வாறாய் நம் வாழ்நாள் வீணாய்ப் போகலாயிற்றே! என் செய்வேன்! அவலத்தால் அவலமானேனே! இனி அவலமாய்--அவசரமாய்ச்சென்றபையன் அடங்கி ஒடுங்கி * அழகுள்ள நல்ல பையனாய் வந்து சேருவனோ! ராமச்சந்திரன் கிருபை யெம்மட்டிலிருக்கிறதோ! சீ, சீ, கடவுளைநோவதால் பயனென்னே; நம்முடைய வினைப்பயனுக்கு அவரென் செய்கிற்பார். நற்குலத்துதித்தார்க்கு னென்னை, நற்செல்வத்திற்பிறந்தார்க்கு னென்னே; நற்பெண்டிரை மணந்தாற்றானென்னை?

இன்னும் வரும்.

துறையூர் மா. சுப்பராமய்யர்.

---

* அழகு: இவ்விடத்தில் குணம் என்றர்த்தமாம்; நற்குணத்தினையழகாய்க் கருதலாயிற்று. குணவழகு அழகேயல்லாமல்உடல்மினுக்கிளழகு அழகல்ல.

(103-ம் பக்கத்தொடர்ச்சி.)

அத்தியாயம்-3.

மூத்த தாயார்களின் சூழ்ச்சியினின்று தப்புதல்.

உழவன் கூறிய மொழிகளைக் கேட்டவுடன் அரசிகள் இதை ஒருவரிடமும் வெளியிடவேண்டாமென அவனை எச்சரிக்கை செய்து அனுப்பிவிட்டு எல்லாருமாக ஒன்றுகூடி இது யாதுகாரணமாயிருக்க வேண்டுமென யோசித்து, "குழந்தை அழுததென்றானே, அது ஒருவேளை நாம் எலிவளையிலிட்ட குழந்தையாகத் தானிருக்க வேண்டும். ஏனெனில் அப்பெருச்சாளி இறந்த பிறகு இக்குழந்தை பிள்ளையார் கோவிலில் இருந்துக்கொண்டு உழவன் வைத்த பொருள்களை உண்டிருக்கலாம். ஆதலால் அந்த கல்பிள்ளையாரை உடைத்து விடவேண்டும். அப்பொழுது அங்கு பாழடைந்து விடும் ஒருவரும் பிறகு ஒன்றும் படைக்கமாட்டார்கள். குழந்தை உணவில்லாமல் இறந்துவிடும். இதற்காக நாம் முன்போலத் தலைவலி எனப்படுத்துக்கொண்டு அதற்கு இப்பிள்ளையாரை உடைத்து அரைத்துப் பத்துப்போட்டால் தீருமெனச் சொல்லவேண்டும்." எனத்தீர்மானித்துப் பின் அவ்விதமே முடகிப் படுத்துக் கொண்டனர். அரசன் வந்து கேட்டதற்குத் தங்களுக்குத் தலைவலியென்றும் அதற்குக் கல்பிள்ளையாரை உடைத்து அரைத்துப் பத்துப்போட்டால் தான் தீருமென்று பதில் கூறினர். இப்பொழுதாவது அவ்வரசனுக்கு நல்லறிவு வந்து இவர்கள் என் இவ்விதம் செய்யச் சொல்கின்றனரென ஆராய்ந்து பார்த்தானு இல்லை. பின்னென்ன செய்தான். சிறிதும் அறிவின்றி விநாயகக்கடவுளின் உருவத்தைப் பொறாமைகொண்ட பெண்களின் பேச்சைக்கேட்டுக் கொண்டு அழிக்க எண்ணினன் தன் மந்திரியை யழைத்துக் கற்பிள்ளையாரை உடைத்து அரைக்கும்படி கட்டளையிட்டான். அம்மந்திரி ஒன்றும் பதில் கூற வழியில்லாது அரசன் சொற்படியே சில பணியாட்களை விட்டு அப்பிள்ளையாரைக்கொண்டு வரும்படி கட்டளையிட்டான்,

இச்சங்கதி முன்பே விநாயகருக்குத் தெரிந்திருந்ததாதலால், அவர், இப்படிப்பட்ட அரசனிருக்கும் பட்டணத்தில் இருக்கவே கூடாதென எண்ணிக்கொண்டு, நம் குழந்தைக்குச் "சங்குபாலகன்" எனப்பெயரிட்டு அவனுக்கு எல்லாவித கலைகளும் தானே உண்டாகும்படி அருள்புரிந்து அவனையழைத்து, "அப்பா சங்குபாலகா! இனிமேல் நீ இங்கிருப்பது சரியல்ல உனக்கு எல்லாவித கலைகளும் உண்டாகும்படி அருளுகின்றேன். உன்னை இப்பொழுது யாம் ஓரிடத்திற்கு அனுப்புகிறோம். நீ அங்கு சென்றுச் சிறிது நாளான பிறகு உன் தந்தையையடைந்து அரசைப்பெற்று வாழ்வாய். இப்பொழுது உன்னை இங்கு விட்டுச்சென்றால் உன் மூத்ததாயார்கள் கொன்றுவிடுவர். அதனால் நீ சுகமாய்ச் சென்று வருவாய்." எனக்

கூறி ஆசீர்வதித்துத் தன்மேல் அதிக அன்பு (பக்தி) கொண்டிருந்த ஒரு அரக்கியினிடம் அவனை அனுப்பிவிட்டார்.

மந்திரி ஏவிவிட்ட ஆட்கள் வந்து கல்பிள்ளையாரை உடைத்து அதைக்கொண்டு போய் அரைத்துக் குழம்பாக்கிக் கொடுத்தனர். மாயத்தலைவலி கொண்ட சண்டாளிகள் அரைத்த குழம்பைப்பத்து போட்டுக்கொண்டு நோய் நின்று விட்டதெனகூறிவிட்டனர்.

மூன்றும் அத்தியாயம் முற்றிற்று.

அத்தியாயம்-4.

பிணந்தின்னியிடம் சிக்கி மீளுதல்.

பிள்ளையார் அனுப்பிய நம் சங்குபாலகன் பிணந்தின்னும் ஓர் அரக்கியின் மகளிடம் போய்ச் சேர்ந்தான். அவள் தன் தாயைப் போலல்லாது மிக்க நல்லவளாயிருந்தாள். அவள் அவனை அன்புடன் வரவேற்று நன்ருய்ப்பாதுகாத்து வந்தாள். அவன் அங்குச் சென்ற இரண்டு நாளைக்குப்பின் அப்பிணந்தின்னியரக்கி தன்மகளிருப்பிடத்திற்கு வந்தாள். அப்பொழுது அங்கு ஒருநாளுமில்லாத ஆண்வாடை வீசியது கண்டு தன்மகளைக்கேள்க்க, அவள் என் தம்பி இங்கே இருக்கிருனென்ருள். "நான் பெருமல் உனக்கு எங்கிருந்து வந்தான் தம்பி" என்று தாய்கேட்க, "பிணத்தின்மேல் ஆவலாய் ஓடும் பொழுது அவன் பிறந்தான். நீ அதைப் பார்க்காமல் போட்டுவிட்டு ஓடியதால் நான்வேறுபால் கொடுத்து வளர்த்து வருகிறேனென்ருள் மகள்.

"அப்படியாயின் அப்பிள்ளையை என்னிடம் காண்பிப்பாய் என்ருள் தாய்.

"நான் காண்பிக்கிறேன். ஆனல் நீ அவனைக் கொன்று தின்னவில்லையெனப் பிரதிக்கினை செய்து கொடுக்க வேண்டும்" என்ருள் மகள்.

"யான் கொல்ல வில்லை காண்பிப்பாய்" என்று தன் பாலைப் பீச்சி அதில் சத்தியம் செய்துக்கொடுத்தாள் பிணந்தின்னி.

உடனே சங்குபாலகனைத் தன்தாயிடம் காண்பித்தாள் மகள். அவனைக் கண்டவுடன் எவ்விதத்திலும் இப்பிள்ளையின் இளஞ்சதையை நாம் தின்னவேண்டுமென எண்ணங் கொண்டாள் பிணந்தின்னி.

சிறிதுநாட்சென்று ஒருநாள் சங்குபாலகனைத் தன்னுடன் காட்டுக்கனுப்பும்படி தன் மகளைக் கேட்டாள் பிணந்தின்னி. "நாம் இவனைகாட்டுக்கனுப்பினல் ஒருவேளை நம் தாய் கொன்று புசித்துவிட்டாலென்ன செய்வது" என ஐயுற்றிப்பின், "நம் தாய் இவனைக் கொல்லமாட்டேனென் முன்னமேயே சத்தியம் செய்திருக்கிருள்

அதனுல் அவ்விதம் செய்யாள் '' என ஒருவாறுதேறி பாலனை அவளுடன் அனுப்பவே, பிணந்தின்னி அவனைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு காட்டுக்குள் வெகுதூரம் சென்றுள். பாலனைப் பார்க்கப் பார்க்க அரக்கிக்கு அவனைப்புசித்துவிட ஆவலுண்டாயிற்று ஆனுல் தான் அவனைக்கொல்லுவதில்லை யெனப் பிரதிக்கினை செய்து இருப்பதால் அவன்தானே மாண்டபிறகு தின்ன வேண்டுமென உன்னி அவனை அங்கிருந்த நீரில்லாத ஒரு குட்டைக்குள் தள்ளி அவன் மார்பின்மேல் ஒரு கனத்த கல்லைத்தூக்கிவைத்துவிட்டுவேறு பிணங்களைதேடியுண்ண போய்விட்டாள். (தொடரும்.)

அ. சः அருணுசலேச்வரர்.

சன்னிக்கிருப் சிங்காரவத்தை, ருவன்வெல்ல, இலங்கை.

மதனசுந்தரி அல்லது மர்மக்கொலைகள்.

(97–ம் பக்கத் தொடர்ச்சி.)

இச் சோதிவிலாஸத்தை விவரிப்பதென்றுல் ஆயிரம் நாவைப் படைத்த ஆதிசேடனுலுமியலாதென்றுல் நம்மாலென்ன வாகும். ஜோதிவிலாசமானது சுமார் ஒரு பர்லாங்சுற்றளவுள்ளது. நாற்புறமும் நவீனமாய் 3 அடி அகளமும் 12 அடி உயரமுள்ள விசித்திரமாய் சுவர் எழுப்பியிருந்தது முகப்புசுவற்றில் உள்ளே போகும் வழிகளை யேற்படுத்தி, வெளியேபோகும் வழியொன்.றும், என இரு வழிகளை யேற்படுத்தி, அதற்கு இருப்புகேட்டுக்களை வைத்திருந்தனர். இவ்விருவழிகளுக்குமத்தியில் ஒருவளைவு, சலவைக்கல்லால் செய்து அதினில் ஜோதிவிலாசம் என்று தங்கமயமாய் ஜொலிக்கப் படும், எழுத்துக்கள் பெரிதாய் இருந்தது.

இப்பொழுது உள்ளே சென்றுப்பார்ப்போமானுல் சுற்றிலும் அழகிய நந்தவனத்துடன் நடுவில் சுமார் அரைபர்லாங் சதுரத்தில் பெரிய இரண்டு அடுக்குள்ள மாடிவீடு அமைக்கப்பட்டிருந்தது சுற்றிலுமுள்ள நந்தவனத்தில் வளர்ந்திருக்கும், ரோஜா, மல்லி, இருவாக்ஷி, சண்பகம், பன்னீர், முல்லை, சந்தனம், அகிழ், சாமிந்தி, செவந்தி, மனோரஞ்சிதம், கதிர்பச்சை என்னும்படியான நறுமணம் பொருந்திய மலர்களால் வீசும்படியான சுகந்தமணம் அம்மாடிவீட்டினுள் உட்கார்ந்திருப்போரது மனதைகவர்ந்து அவர்களை அவ்வீட்டினின்று வெளிவந்து நந்தவனத்தில் உலாவச்செய்தது. நந்தவனத்தில் ஒவ்வோரிடத்தில் கானமயில்கள் ஆடுவதும், தானே குயில்கள் பாடுவதும், மானதுகள் துள்ளி துள்ளி யோடுவதும், இவைகளையெல்லாம் ஒரு இடத்திலமர்ந்து களிப்பதற்கு தகுந்த பளிங்கு மேடைகளுமிருந்தன.

இப்பொழுது வீட்டின், ஸ்திதியை கவனிப்போம். இவ் வீடோ சந்தனகல்லினல் கட்டப்பட்டது. இதனுள்பெரிய அறைகளும், பெரிய ஹால்களும், பெரியகூடங்களும், பெரிய சமயலறைகளும், படுக்கை அறைகளும், குளிக்குமறைகளும், இன்னும்பல வித அறைகளுமுள இவற்றில் எங்கு பார்த்தாலும் மின்சாரவிளக்குகள் பளிச்சென்று, வெளிச்சத்தைதருகின்றன. நந்தவனத்தின் நறுமணக்காற்றை நாலாப்பக்கங்களிலும் பரவச்செய்ய தகுந்த, மின்சார விசிரிகள் விர், விர், என சுழன்று கொண்டிருக்கின்றன. எங்கு பார்த்தாலும் ரவிவர்மாவின் அதிஅற்புத அபூர்வச் செயல்களால் செய்யபட்ட பலவிதமான படங்கள் தொங்கவிடப்பெற்றிருந்தன. எங்குபார்த்தாலும் பீரோக்களும், மேஜைகளும், சோபாக்களும், நாற்காலிகளும், கட்டில்களும் இருந்தன தரையில் ரத்தினக்கம்பளங்கள் கண்களைக்கவரத்தக்கபடி போட்டிருந்தது. சுற்றிலுமுள்ள சுவர்களிலெல்லாம் மின்சாரவிளக்குகள் மின்னிக்கொண்டிருந்ததால் தான் அதற்கு ஜோதிவிலாஸம் என்றுப் பெயரிட்டிருந்தனர். இரு வழிகளிலும் காவல் காரர்கள் நின்றுக்கொண்டு தங்கள் வேலைமேல் கண்ணுக இருந்தார்கள். அவர்களைப் பார்த்தால் அசல் போர்வீரர்கள் போலிருந்தார்கள்.

இப்பேர்பட்ட இம்மாளிகை மூர்த்திமுதலியார் காலத்திலேயே தன் குமாஸ்தாக்களாகிய நீலமேக, சாமளவர்ணமுதலியார்களுக்காக கட்டிவைத்தார். முதலில் அவரே கட்டுவதாய் முன்னுக்குவந்தார் ஆனல் இந்த நீலமேக, சாமளவர்ணமுதலியார்கள் தாங்களே க்ட்டிக் கொள்வதாக சொல்லி ஜோதி விலாசத்தை அவர்களே கட்டியக்காரணம்யாதோ நாமறியோம் அதனுள் ரகஸிய அறைகளும், சுரங்கங்களும் இருப்பதாய் சிலர் பேசிக்கொள்ளுகிறார்கள். சிலர் அதை பொய்யென்று சொல்லுகிறார்கள். எப்படி பேசினல் நமக்கென்ன நமது கதையை இனிதுடர்வோம்.

மதனனும், சாமளனும் மாளிகையை நெருங்கி மின்சாரமணியடிக்கும் பொத்தானை அழுக்கினுர்கள். மருநிமிடம் கேட்டை திரந்தான் ஒருவன். இருவரும் உள்ளே சென்றுர்கள். இவர்களை மாதவன் என்னும் தலைமை பணியன் வரவேற்றான். இருவரும் ஓர் அரையில் உட்கார்ந்தனர் சாமளன் மாதவனை போடுமாறு உத்தரவிட்டு கதவின் தாழ்ப்பாளை மூடித்தாளிட்டு விட்டான், பிறகு தன் ஆசனத்தில் வந்தமர்ந்தான் இருவரும் பத்துநிமிடம் வரை மௌனமாயிருந்தனர். பிறகு சாமளன் மதனனைப்பார்த்து இப்பொழுது உன்னுடைய அந்தரங்கஉதவியை சொல்லலாமாவென்றும் சொல்லக்கூடுமானல் சொல்லும்படிக்கும் கேட்டான். பிறகும் மதனன் ஒரு ஐந்து நிமிடநேரம் ஏதோ வெவ்வேறு விதமாய் ஆலோசித்துக்கொண்டிருந்தான்.

அதற்குள் சாமளன் உனக்கு என்னிடம் கேட்பதில் மனச்சங்கடமாயிருந்தால் ஏதொன்றும் நவில வேண்டாம் என் பொருட்டு நீ கஷ்டப்படவேண்டாம்" என்றான்.

மதனன்:-- சே, சே, அப்படிக்கொன்றுமில்லை, என்றான்.

சாமளன்:--பின் ஏன் மௌனம் சாதிக்கின்றாய், ஏதேதோ யோசித்து மனச் சங்கடபடுபவன் போல் கஷ்டப்படுகிறாய். ஆனால் ஒன்றுமாத்திரம் நினை, உன்னுடைய உபகாரம் என் உயிரைவிட மேலானதாயிருப்பினும், என் அன்பார்ந்தநேசனாகிய உன் பொருட்டு என் உயிரைக்கொடுத்தும், உபகரிப்பேன், இது முக்காலும் சத்தியம், என்றான்.

மதனன்:---நண்பா! நீ அப்படியே செய்வாய் என்பது என்மனதில் பூரணநம்பிக்கை யேற்படுகிறது. ஆனால் நீ உன் உயிரை கொடுத்து கஷ்டப்பட்டு எனக்கு உபகரித்தாலும் அது தவிறிப்போய் விட்டால், எல்லாம் நன்றாய்த் தெரிந்து விடுமே என்று இயங்குறேன் என்றான்.

சாமளன்:----மதனா பயப்படாதே அன்னவனன்றி ஓரணுவு மசையாதென்பதை உணர் கடவுள் கடாக்ஷத்தால் எல்லாம் நமக்கு ஜெயம் கிடைக்கும் உனது உபகாரத்தை சொல் என்றான்.

(இன்னும் வரும்,)

R. G. Rajan, Tiruchinopoly.

பழையநாள் நினைவு.

(1) எத்தனை இரவோ ஊர் அடங்கியபின்
நித்திரையினில்யான் உணர்வுநீங்குமுன்
ஆதியில்நிகழ்ந்தன அநேகவற்றைஎன்
பேதைஉள்ளம் பிரியமொடெண்ணுமால்
என்னிளவயதில் இன்பினில்நிகழ்ந்த
புன்னகைகள் துயர் பொருமுகண்ணீர்கள்
மன்னிளங்காதலில் உரைத்தவார்த்தைகள்
பின்பு ஒளிமழுங்கி இறந்தபெற்றிய
உற்சாகம் கிளர்ந்தோங்கிய உளங்கள்
இன்னணம் நிசப்த இரவினில் இன்துயில்
துன்னி அயர்ந்துயான் தூங்கிடும் முன்னர்
சென்றன ஞாபகம் செய்து
இன்றெனதுள்ளம் எண்ணி எங்குமே.

(2) ஒருவர்க்கொருவர் உற்ற நண்பர்கள்
பருவமாரிபட்டுதிர் இலைகள்போல்
என்னைச்சுற்றிலும் என்கண்காண
இன்னாள்வரையில் இறந்தவர் தமையான்
உன்னுங்காலை ஓர் விருந்துச் சாலையில்
இன்னொளிவிளக்குகள் எல்லாம் அவிந்து
மன்னுதோரணமாலை நள்வாடி
தன்னையன்றி மற்றெவரும் தவிர்ந்தபின்
தானே தனியாய் உலாவும் தமியனை
யானும் இன்று மானுவேன் மாதோ,
இன்னணம் நிசப்த இரவினில் இன்துயில்
துன்னி அயர்ந்துயான் தூங்கிடும் முன்னர்
சென்றன ஞாபகம் செய்து
இன்றென துள்ளம் எண்ணி ஏங்குமோ.

P. L. S. K. R.
கீழ்ச்சிவல்ப்பட்டி

ஸ்திரீகளுக்கான பகுதி

"இல்லறதர்மம்"

(105-ம் பக்கத்தொடர்ச்சி).

ஸ்திரிகள் தங்களை பொன்னாலும் பூஷணங்களாலும் அலங்கரித்து கொள்வதிலும் தங்களுக்கு முக்கியமாக வேண்டிய அச்சம் மடம், நாணம், பயிற்பு. என்னும் இந்நான்கினாலும் அலங்கரித்துக் கொள்வதே மேலானது அவைகளே அழகு செய்யும்.

"நிலத்திற்கணியென்பரி நல்லும் கரும்பும்
குலத்திற்கணியென்பதாமரைப்பெண்மை
நலத்திற்கணியென்ப நாணந்தனக்கணி
தான்சொல்லுலகத்தறம்" என்றுமேலோர் கூறியுள்ளார்.

'தற்காத்துத்தற்கொண்டாற் பேணித்தகை சான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

என்றபடி தனது கற்பு நிலைமை தவறாமல் தன்மனம் குணம் முதலியவைகளில் பிறர்க்கு சந்தேக முண்டாகாவண்ணம் கவலை கொண்டு தன்கணவனுக்கு உண்டி முதலிய சுகங்களில் ஒரு கெடுதலும் உண்டாகாமலும் மிகவும் ஜாக்கிரதையாய் நடக்கவேண்டும்.

கண்டகணவனை கனப்படுத்தமுடியாதவள் காணாத கர்த்தனை எங்கனம் கனப்படுத்தமுடியும் என்பதுபோல் தன்கணவன் பசித்த வேளையில் அருசுவையுடன் கூடிய ஆஹார மூட்டியும் களைத்தவேளை

யில் அக்களை தெளியுமாறு விசிறிகொண்டு விசிறியும் கோபமாயிருக்கும் வேளையில் இன்சொல்புகட்டியும் படுத்தவேளையில் கால் கை பிடித்தும் அக்கணவன் மனங்கோணுமல் நடத்தலே கற்புடைய பெண்டிற்குகந்த கடமையாகும்.

கணவனும் மனைவியும் ஒருயிரும் ஈருடலும் போல் ஒரே மனதுடையவர்களாய் வாழவேண்டும் அவ்வாறில்லாமல் சதாகாலமும் வெறுத்து அவனைச்சுகப்படுத்தாதமனைவி யமனுக்குச் சமதையாவாள்

'தூற்றும்பெண்டிர் கூற்றெனத்தகும்'

கூற்றமே இல்லிற் கிசைந்தொழுகாப்பெண்'

கணவன் எதை விரும்புகிருரோ அதை அப்பொழுதே தவக்கமின்றி செய்து அவர்மனங்களிக்குமாறு ஒழுகும் பெண்டிரே கற்புடைய பெண்டிராவாள்.

"எப்பணியா லின்புறுவர் காதலர் அக்காதலரை
அப்பணியாலப்பொழுதே யன்புறுத்தி–வொப்ப
மனங்குழையும் வண்ணம் மகிழ்விப்பதொன்றே
கணங்குழையார் தங்கள் கடன்"

'கொண்டவன் குறிப்பறிவாள் பெண்டாட்டி

என்றபடி அவன் குறிப்பறிந்து நடத்தலே மேலானதாகும். கணவனது சுகத்தை நாடாது தன்சுகமே மேலானதென்று கருதுபவள் நாயகத்துரோகியாவாள். ஸ்திரீகள் ஒருபொழுதும் தன்கணவனை கொடுஞ்சொற்களாவது அலக்ஷியவார்த்தைகளாவது அவமதிக்கக்கூடாது. தேவதைகள் பிதிர்கள் பிராம்மணர்கள் முதலானவர்களிடத்தில் பக்தியாயும், அவர்கள் காரியத்தில் அதிக பிரீதியுடையவர்களாயும் இருத்தல் வேண்டும் தன் கணவன் தனியேயிருக்கும் வேளையில் அவனுக்கு தலையணைமந்திரோபதேசம் செய்து வீட்டிலுள்ளோரோடு சண்டைசச்சரவு முதலியவைகளை உண்டாக்கி ஸதாகலகம் செய்தல் என்ற கெட்டவழக்கத்தை அறவே மறந்து தன்புருஷன் தனக்கெப்படி சொந்தமோ அப்படியே அவர் தாய் தகப்பன் சகோதர சகோதரிகளை தன் தாய் தகப்பன் சகோதரசகோதரிகளாக பாவித்து அவர்களிடம் பட்சமாய் இருக்கவேண்டும் பிறன் மனைக்கேதல் என்றகெட்ட வழக்கத்தை அறவே ஒழித்துவிட வேண்டும் எந்தரகசியங்களையும் வெளியிடக்கூடாது. உறக்கபேசல் சிறித்தல் கூடாது இத்தியாதி குணங்களுள்ள ஒரு மனைவி ஒரு மனிதனுக்கு வாய்தாளேயானல் அவனுக்கு அதைவிட வேறு என்ன வேண்டும்?

அறப்பளீசுரசதகம்.

கணவனுக்கினியளாய் மிருதுபாஷியாய் மிக்க
சம்பவிகர் ரூபவதியாய்
காய்சினமிலாளுமாய் கோபழியிலாததோர்
காக்வழியில் வந்தவளுமாய்

மணமிக்க நாணமடமச்சம் பயிர்ப்பென்ன
 வருமினிய மார்க்கவதியாய்
மாமிமாமர்க்கிதஞ் செய்பவளுமாய் வாசல்
 வருவிருந்தோம்புபவளாய்
இணையின் மகிழ் நன்சொல்வழி நிற்பவளுமாய் வந்தி
 யென்பெயரிலாதவளுமாய்
இரதியெனவேலீலை புரிபவளுமாய் பிறந்த
 மில்வழிசெலாதவளுமாய்
அணியிழையொருத்தி யுண்டாயினவள்
 கற்புடையளாகும்

என்றதால் இக்குணங்கள் எல்லாம் அமையப்பெற்ற பெண்டிர்களுக்கு சாதகமாகாததுவும் உண்டோ ?

"முக்கணர் தண்டலை நாட்டில் கற்புடைமங்
 கையர் பெருமை மொழியப்போமோ?
ஒக்குமெரி குளிரவைத்தாளொருத்தி; வில்வே
 டனை யெரித்தாளொருத்தி; மூவர்
பக்கமுறவமுதளித்தா ளொருத்தி; யெழு
 பரிதடுத்தாளொருத்தி; பண்டு
கொக்கெனவே நினைந்தனையோ கொங்கணவா
 வென்றொருத்திக் கூறினளே" என்று பதிவிரதா சிரோமணிகளின் சிறப்பு கூறப்படுகிறது. அரிச்சந்திரன் மனைவி சந்திரமதி விசுவாமித்ரரால் உண்டான காட்டுத்தீயை தன்னுடைய கற்பென்னும் நீரால் குளிரவைத்தாள். நளமஹாராஜனுடைய மனைவி தமயந்தி தன்னை விரும்பிய வேடனை ஒருபார்வையில் எரித்தாள், அத்திரி மஹ ரிஷியின் மனைவி அனுஸூயை பிர்மா விஷ்ணு ருத்திரன் மூவரையும் சிறு குழந்தைகளாக்கி பாலூட்டினாள்.

நளாயினி மாண்டவியரின் சாபத்திற்காக சூர்ய உதயமாகாமல் தடுத்தாள்.

திருவள்ளுவரின் மனைவிவாஸுகியம்மை தன்னை நோக்கிவிழித்த பிரும்மணனை முன் அப்பிராமணனால் எரிப்பட்ட கொக்கென் றுநினைந் தனையோ கொங்கணவா என்று முன் நடந்ததை மொழிந்தாள்.

• ஆதியில் கற்புடைய மங்கையர்களுக்கு திரிகாலஞானமும் உண்டென்பதிற்கு என்ன ஆக்ஷேபனை ? இன்னும் ஸாவித்ரி தன் கற்பின் மஹிமையால் இறந்த தன் புருஷன் உயிரை மீண்டும் அடைந்தனள். மேலும் எத்தனையோ கற்புடைமங்கையர்கள் ஒருவராலும் ஸாதிக்க முடியாதகாரியங்களை ஸாதித்து இருக்கின்றனர். கற்புடையமங்கைகளுக்கு ஆஹாதகாரியமும் உண்டா !

'தெய்வந்தொழா அன்கொழுநன்றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யுமழை.'

'பெண்ணிற் பெருந்தக்கயாவுள கற்பென்னும்
திண்மையுண்டாகப் பெறின்

ஆதலால் கற்பென்ற பாக்யம் கைகூடிவிட்டால் எல்லாம் கை கூடிவிட்டது. இவ்வளவு குணங்களமைந்த ஒரு ஸ்திரீயும்,

*' ஓரிலாட்காண்முறையுற்றதலைவனுய்
ஏருலாமனைக்கொடியினிது படர்தர
வாய்த்துகொள் கொம்பராய் வான்குணம் பூத்துக்
காய்த்துப் புகழ்நலங்கனிபயன் மரமாய்ப்
பணமணிதன்னைப்பரிவுடன் போற்றும்
பணியென மனைவியைப் பாதுகாக்கு நனுய்த்
தன்னில்லாளைத் தனக்கிணையாய
தலைவியாமதிக்குந்தன்மையாளனுய்
வயங்கு நனலனே நயங்கொளுங்கணவன் ?

(அவ்வாரின்றி.)

மற்றுள மார மணந்ததையலைக்
சற்றுமருளின்றித்தவிக்கியபுரியுனன்
கண்ணவனேவக்காதலிதனக்கு
புண்ணவனென்றே புகல்வர்
மேதகு பொருளியலோதாரவோரே''

முன் கூறியபடி நற்குணம் பொருந்திய கணவனும் மனமொத்து நடத்தும் கிரஹஸ்தாச்ரம தர்மமாகிய இல்லறமே நல்லறம் மற்றவை எல்லாம் இல்லறமே,

' மருவியகாதன் மனையாளுந்தானும், இருவ
ராய்ப் பூண்டுய்ப்பினல்லால்—ஒருவரால்,
இல்வாழ்க்கையென்றுமியல்புடைய வா
ன்சகடம், செல்லாது தெற்றிற்று நின்று.

(முடிவுரை) ஆதலால் சகோதர சகோதரிகளே சுருதிஸ்மிருதி களில் கூறியுள்ளபடி கிரஹஸ்தாசிரமதர்மம் குறையாமலும் உலக நடவடிக்கையை ஒத்தும் நடந்து வந்தால் கடைசியில் ஈசுவர ஸாயுஜ்ய மடையவர்களென்பது திண்ணம்,

" இல்லறமல்லது நல்லறமன்று"

சுபம் ! சுபம் !!

---

*சூரிய நாராயண சாஸ்திரிகள் தனிப்பாசுரத்தொகை.

Sangarappa Srinivas, Odaiyalur.

பழயைனூர் நீலிவரலாறு

தொண்டைநாட்டிலே ஒருவன் நாள்தோறும் பிறமங்கையரிடஞ் சென்று நட்புற்றிருந்ததை அவன் மனைவியறிந்து தடுத்து தன்வச மாகும்படி வேண்டிய உபாயங்கள் சொல்லியும் கேளாமல்; இவள் தன் எண்ணத்திற்கு ஓர் இடையூறாயிருக்கிறாளென்று அவளை வஞ் சகமாய்க் கொல்ல நினைத்து, ஒரு நாள் அடுத்த ஊரில் நடக்கும் ஒரு சிறப்பை அவளுக்குக்காட்ட விருப்பமுள்ளவன் போல இதங்கூறி அழைத்துக்கொண்டு போய் நடுகாட்டில் கொன்றுவிட்டான் மறு பிறப்பில் அவள் ஒரு பிசாசாகி அவனைக் கொல்லக்கருதியிருந்தாள் அவள்புருடன் ஒரு செட்டியாகப்பிறந்து வளர்ந்து வர்த்தகஞ்செய்து கொண்டிருக்கும் நாள்களில் ஒரு நாள் சோதிட சாஸ்திரி ஒருவன் வந்து அவனுக்குச் சாதகம் பார்த்து நீ வடதிசை நோக்கிச்சென்றால் அங்கு ஒரு பேயினால் இறப்பாய்; அது தவறாது ஆயினும், அப்பேய் உன்னைத்தொடராதிருக்கும்படி நான் ஒரு மந்திரவாளை உனக்குக் கொடுக்கின்றேன். இது உன்னிடத்திலிருக்குமளவும் அந்தப்பேய் உன்னை நெருங்காது என்று சொல்லிக்கொடுத்து விட்டுப்போயினான் பின் சில நாள் பொறுத்து அந்தச்செட்டி வர்த்தகஞ் செய்யும் பொ ருட்டுத் தன் ஊரிலிருந்து வடதிசையிலுள்ள பழயனூருக்குப் போ கும்பொழுது, நீலி என்னும் அந்தப்பேய் முற்பிறப்பில் அவன் தன் னைக் கொன்ற பழிக்குப்பழிவாங்கும்படி அவன் மனைவிபோல் உரு வங்கொண்டு பின் தொடர்ந்து வர, அவ்வணிகன் சில குறிகளால் இதுபேயென்று அறிந்து தன்கையிலிருக்கும் மந்திரவாளின் பலத்தி னால் சிறிதும் அஞ்சாமல் அந்த ஊரிலுள்ள வேளாளர்களிடத்துச் சேர்ந்தான். அப்பொழுது அந்தப்பேய் அவர்களிடத்துச் சென்று என்கணவராகிய இவர் நெடுநாளாக என்னோடு பேச்சின்றி விரோ தப்பட்டிருக்கின்றார், நான் எவ்வளவு தாழ்மையாக வேண்டிக் கொண்டாலும் சிறிதும் இரக்கமற்று வெறுக்கின்றார் ஐயோ ? இவ ருக்கு நான் என்ன தீங்கு செய்தேன். நீதிமான்களாகிய நீங்கள் அவருக்கு என்னிடத்திலுள்ள கோபத்தை நீக்கி எதிரிலுள்ள இம் மண்டபத்தினுள் அவரையும் என்னையும் போகவிடுவீர்களாயின் அவருடன் சில வார்த்தைகள் பேசிப் போகின்றேனென்று சொன்ன வுடனே செட்டி இவளை என் மனைவி யென்று நீங்கள் நினைக்கவேண் டாம் இது ஒரு கொடிய பேய் என்னைக் கொல்ல வந்திருக்கிறது என்று சொன்னான் அதற்கு நீலி ஐயா ? இவர் என் கணவரேயாகும் அதையுங்களுக்கு நிச்சயமாக தெரிவிக்கிறேனென்று (கள்ளிக்கட் டையைக் குழந்தையுருவாகச் செய்து) இடுப்பில் வைத்திருந்த மாயக் குழந்தையைக் கீழேவிட அது யாவரிடத்தும் செல்லாமல் செட்டியி னிடத்துக்குப்போய் மேல்விழுந்து விளையாடிற்று அப்பொழுது வேளாளர்கள் அவனைப்பார்த்துச் செட்டியாரே ? நீர் ஏன் பொய் கூறுகிறீர் ; உம்முடைய மனைவி துன்பமடையாமல் இம்மண்டபத்

தில் புகுந்து, அவளுக்கு ஒரு சமாதானஞ்சொல்லிவாறுமென்று அனுப்ப, அவன்கையில் மந்திரவாளைப் பிடித்துக்கொண்டு சென்முன் அதைக்கண்ட நீலி ஐயா! இவர் கையிலுள்ள கத்தியை நீங்கள் வாங்கிக்கொள்ளுங்கள். இல்லாவிடில் என்னைக்கொன்று விடுவா ரென்று கூற அவர்கள் அதனை நிச்சயமாக நினைத்து அந்தவாளை வாங்கிக்கொள்ளவும், வணிகன் பயந்து ஐயோ! இந்த ஆயுதமிருக் கின்றபடியினால் தான் நான் இது வரையிலும், பிழைத்திருந்தேன். இல்லாவிடில் இந்தயமன் அப்போதே வாயில் போட்டுக்கொள்ளுமே என, வேளாளர்கள் செட்டியாரே! நீர் ஒருவர் இறந்தால் உமக்காக நாங்கள் எழுபதின்மரும் உயிர்விடுகிறோ மென்று தேற்றி உள்ளே போக அனுப்பினார்கள். அவ்வாறு புகுந்த பொழுதே அந்தப்பேய் வணிகனைக் கிழித்துக்கொன்று விட்டுப்பின் அவன் தாய்போல் வேஷங்கொண்டு வந்து வேளாளர்களைப்பார்த்து உங்களிடத்து வந்த என்மகனை என்ன செய்தீர்களென்று கேட்க, அவர்கள் செட்டிவரு வானென்று வெகுநேரம் காத்திருந்தும் அவன் வராமையால் அம் மண்டபத்தின் கதவைத்திறந்து பார்த்த பொழுது அவனுடலும் கிழிக்கப்பட்டிறந்து கிடப்பதைக்கண்டு அவர்கள் எழுபது பே ரும் தாங்கள் சொல்லிய சொல் தவருமல் தீயில்குதித்து, திருவாலங் காட்டிறைவன் பொன்னடியை அடைந்தனர் என்று கூறுவதனால் இச்சரிதையை இங்ஙனம் விரிவஞ்சி விடுத்தலம். இதற்குப் பிர மாணம்.

திருத்தொண்டர் புராணம்.

மாறுகொடு பழையனூர் நீலிசெய்த
வஞ்சனையால் வணிகனுயிரிழப்பத்தாங்கள்
கூறியசொல் பிழையாது துணிந்து செந்தீக்
குழியிலெழுபது பேரு முழுகிக்கங்கை
யாரணி செஞ்சடைத் திருவாலங்காட்டப்ப
ரண்டமுற நிமிர்ந்தாடுமேடியின் கீழ் மெய்ப்
பேறுபெறும் வேளாளர் பெருமை யெம்மாற்
பிரித்தளவிட்டிவளவெனப்பேசலாமோ

கடவுள் நமக்கும், "இரஞ்சிதனுக்குப்" பூரண அருள்புரிவா [ராக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

தீ. பட்டுசாமி ஓதுவார்.
சன்னதி வீதி, திருவண்ணாமலை.

மல்லிகைப்பூ

(438-ம் பக்கத் தொடர்ச்சி)

அவள் கந்தரப்பத்தை எடுத்து வயிற்றப்பதேவருக்கு ஆராதனை செய்தாள் பின்னர் சில் என்று ஒரு திருப்புகழ்பாடினாள் நான் அதில் ஆழ்ந்துவிட்டேன் குருக்களையாவிற்கும் சோக்பிறந்து விட்டது ஆதலால் அன்றிரவு முழுதும் எங்களுக்கு ஒரு களியாட்டமாகவேயிருந்தது நானும் அவ்வின்பத்தினையிற்கலந்து கொள்ளும் பேறு பெற்றேன் அவரும் புஷ்பத்தோடு கட்டிப்புரண்டார். நானும் புஷ்பத்தோடு கட்டிப் புரண்டேன். அவளும் புஷ்பத்தோடு கட்டிப் புரண்டாள், ஆக எல்லாம் புஷ்பமயமாகவேயிருந்தது மருநாள் காலையில் குளிக்கப் போகும்பொழுது அந்தபடும்பாவி அம்மாள்கையிற் பணமில்லாதது சக்திபூஜைபண்ண வரும்பக்தர்களைவிரட்டி வெருத்துத்தள்ளுவது போல என்னையுங்களைந்து கீழே எறிந்து விட்டான் நான் மலையிலிருந்து கீழே எரியப்பட்ட பாவையைப்போல் அறிவிழந்து கிடந்தேன் பட்டகாலிலேபடும் கெட்டகுடியே கெடும் என்பதுபோல் அங்கே வசித்துக்கொண்டிருந்த தாய்க்கிழவி தோழிப்பெண்கள் எல்லோரும் போய்பொழுதும் வரும்பொழுதும் என் தலையில் ஏறிமிதித்துக் கொண்டே சென்றார்கள். என் தலைவிதி வசம் என்று வாளாகிடந்தேன் பிறகு வீடுகூட்டுபவன் எனக்கு வெண்சாமரம்:பணிமாறி என்னை தடுக்கிவிட்டுத் தெருவிலுள்ள குப்பை மேட்டிற் சேர்த்தான். அப்புரம் என்னை நாய்நரிகூட நாடவில்லை. காக்கை சேவல்முதலியவைகளெல்லாம்காலால்குப்பையைக் கிளைத்து அதன் அதனைவயன்மேல் அபிடேகஞ்செய்தது எலும்பு முடிசூட்டின இரும்பு பீங்கான், ஓடு, குப்பை, கனம் என்னை உறவு கொண்டாடின. சாக்கடைகளை சுத்தம் செய்யும் முனிசிபல்வேலைக்காரன் எனக்கு நீல மேக சியாமளவர்ணமுள்ள சாக்கடைப்பன்னீர் தெளித்தான். எழுநாள் இவ்வாறு குப்பையிலே கிடந்து நாறிநாற்றமெடுத்து வரண்டு. காய்ந்து சருகாய்குப்பையோடு குப்பையாய்க் கிடந்து உழன்றேன்.

ஐயகோ ! இஃதென்ன வாழ்க்கை மறந்து ஒரு வாரத்துக்குள் ஊசல் வாழ்க்கையாய்ப் போய்விட்டதே ! அதற்குள் எவ்வளவு திருவிளையாடல்கள், எவ்வளவு இன்பமும் துன்பமும் நான்முன்னே இருந்த நிலை என்ன, இப்பொழுது இருக்கும் நிலை என்ன, பூவுலகிற் பூந்தோட்டத்திற்பிறந்தேன், !பக்தியுடன் வளர்க்கவந்தேன் தேனையும் வாசத்தையும் தெருவெல்லாம் கமழச்செய்தேன் எங்கள் குலத்தின் பெருமையோ அளவிடற்பாலதன்று நாங்கள் சுத்தசைவர்கள் கொலை, களவு, கள், காமம், கோட்பல கனவிலுங் கருதாதவர்கள்

நாங்கள் சிவனடியார்கள் பல்லோரால் பாடப் பெற்றிருக்கின்றோம் தேவார திருவாசங்களிலெல்லாம் எங்கள் திருமணம் கமழ்கின்றது எங்களை யெடுத்தாளாத தமிழ்ப்புலவர் திலகர்களிலர் அந்திதலகர்க ளெல்லாரும் எங்களையே காப்புச்செய்யுட்களில் மங்களச்சொர்களாக வழங்கினர்கள். எங்களிடத்திலுள்ள காந்தி வேறுயாரிடத்திலும் கிடையாது. எங்கள் குருவோ சிறந்தசைவசமயமணி விளக்காகிய கொன்றைப்பூ அடிகளாரானவர் எங்களை ஆடவர் பெண்டீர் இருபால ரினும் பண்டிதர்முதல் பாமரர் ஈறாக எல்லாரும் ஆதரிக்கின்றார்கள் எல்லாத்தெய்வங்களும் எங்களிடத்தில் விசுவாசம் வைத்திருக்கின் றன, இத்தகைய அருமை. பெருமை வாய்ந்த சிவகுலத்துதித்த நான் கெட்டசகவாசத்தினுலன்றோ இக்கதிக்கு வந்து சேர்ந்தேன். கைலாசப் பண்டாரத்தார் ரெதின குருக்கள். செல்லத்தம்மாள் இவர்களுடைய அஸ்தவிசேஷமே என்னை இங்கிலக்குக் கொண்டு வந்து விட்டது. அந்தோ! நல்ல குருக்கள்மாரை நன்றாது இந்த குருக்களிடத்திலேசேர்ந்து சீரழிந்தேனே இப்பொழுது தான் தாசி வீட்டை எட்டிக் கூடபார்க்கக்கூடாதுஅந்த தெருவுக்குகூடபோகக் கூடாதென்று புத்திவந்திருக்கிறது.

ஏனென்றால் இந்தவிஷயத்தில் அழுந்தி நாம நிரம்பப்பட்டு பழகிவிட்டேன், என்னிடத்தில் மணமும் குணமும் இருந்தவரையில் என்னைத்தாசி தலையில் வைத்து தூக்கிசுமந்தாள் வைர புல்லாக்கு அணிந்து மூக்கில்வைத்து முகர்ந்தாள், கண்ணோடு கண்ணாகவைத் துக்கொண்டாள் உரத்தினகுருக்களும் தூக்கிச் சுமந்தார் என்னு டைய மணம் குன்றி வாடிவதங்கி வற்றிவரண்டபோது குப்பை யிலே தள்ளப்பெற்றேன் பிறகு என்னை நாடுவாரும் இவர் தேடுவாரு மிலர். இப்படியே பணமுள்ளவரையில் அய்யாசாமி என் ஆசைக் கண்மணியே என்பார்கள் கையும் மெய்யும் வரண்டுபோனால் நடுத் தலையில் நன்றாக கொட்டி அனுப்புவாகள். இவ்வாராக, குளிக்க போய்ச் சேற்றைபூசிக்கொள்வதுபோல் நாம் ஏன் சாக்கடையென்று தெரிந்துகொண்டபிறகும் அதில் ஸ்நாநம் பண்ணல் வேண்டும், இதற்கு காரணம் நமது அறியாமையேயன்றோ

ஆ! நிலையில்லா இன்மையையும் அழகையும் மணத்தையும் உடையோம் என்று இறுமாப்புக்கொண்டு ஒழுக்கத்தைக் கைவிட் டுத் தாசிவீட்டுக்குப்போனால் குட்டுபட்டு அடிப்பட்டு, மதிப்பட்டு பணமில்லாப் பிணமாய் மண்ணோடு மண்ணாய்ப் போக நேருமன்றோ ஆதலால் எனது அருமைச் சகோதரர்களே, நீங்கள் எல்லோரும் இந்தமாயவலையில் சிக்குண்டு உழலாதீர்கள் உங்கள் உடலையும் உட மையையும் கெடுத்துக்கொள்ளாதீர்கள்' எச்சரிக்கை! எச்சரிக்கை' எச்சரிக்கை!

ஆயிரம் பொன் வருவதாக இருந்தாலும் கெட்டவர்கள் சகவா சத்தைவெறுத்துத் தள்ளுங்கள், நல்ல சேர்க்கையையே சிறந்தது,

சந்தனமரத்திலே படர்ந்திருக்கிறகொடி சந்தனமணங்கமழும் வேம்பிலே படர்ந்திருப்பது வேம்பு நாறும் அவ்வாறே நல்லிணக்கமல்லதல்லர்படுத்தும். ஆதலால் பாம்பொடு பழகலாகாது. சேரிடமறிந்து சேருதலே உத்தமம். போகாத இடந்தனிற்போய் அல்லர்படுவதே அதமம். போக்கிட மறிந்து போவதே புனிதம். புனிதநல்லறம் பல செய்து மறங்கடிந்து புண்ணியத்தைத்தேடினுற்றான் நமக்கு முத்திசித்திக்கும். சுபம்! சுபம் !!

ப ழ ச கருப்பஞ் செட்டியார்'
கீழ்ச்சேவல்பட்டி.

ஹடயோகம் அல்லது பிடிவாதம்.
[விடாமுயற்சி.]

யோகத்தில் பற்பல யோகங்கள் உண்டு. இயம், நியமாதி அஷ்டாங்க யோகங்கள் கூறப்படுகின்றன. கர்ம ஸாங்கியாதி அஷ்டாதச யோகங்களும் பகவத் கீதையில் சொல்லப்படுகின்றன. நாம் கூறும் விஷயம் அவைகளிலொன்றுமில்லை. இந்த ஹடயோக கர்மத்தை விடா முயற்சியாய் நின்று ஆசரிப்பவர்கள் தமக்குறும் ஹிம்ஸையைச் சிறிதும் பாராட்டாமல் பரஹிம்சையைக் களைவதிலேயே நோக்கமுடையவர்களாயிருப்பார்கள்,

" அஹிம்ஸா: பரமோ தர்ம: "

என்றல்லவோ மேலோர் கூறியிருக்கின்றனர். உலகு புகழத் தகுமானதோர் பொது நலங் கருதிய காரிய (கர்ம) த்தை மனவூக்கத்துடனின்று சாதிப்பவர்கட்கு சகிக்கொணாதுன்பமுறும் சம்பவம் வந்து நேரிடினும், அவர்கள் அத்துன்புத்தைச்சிறிதும் பாராட்டாமலே மிகப் பெருமையுடன் மனவமைதிகொண்டு பிடிவாதமாய் முயன்று நின்று சாதிப்பார்கள்.

" மெய் வருத்தம் பாரார் பசி நோக்கார் கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற் கொள்ளார்--செவ்வி
யருமையும் பாரார் அவமதிப்புங்கொள்ளார்
கருமமே கண்ணாயினார்."————என்றும்,

" செயத்தகு முயற்சி செய்திடிற் செயிற்தீர்
செய்ய வண் மணாளனு மிரங்கி
வியத்தகு வேண்டு மியாவையுமளிப்பன்"————என்றும்;

" முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார்" என்றும், மேலோர் மொழிந்திருக்கின்றனர். ஆதலின், விடா முயற்சி செய்து தைரியமாய் நின்று நாம் கைகொண்ட காரியத்தை முடித்தல் வேண்டும்

விண்ணவர்கள் கடலைக்கடைந்தனர் அதினின்று முண்டான அளவிற்கு மிஞ்சின நவநிதிகள் முதலானவைகளைக்கண்டு மகிழ்ந்தன ரில்லை, கொடிய விஷத்தைக்கண்டும் அஞ்சினரில்லை; அன்னவர்களு டைய குறிப்பான காரியமாகிற அமுதைக்காணும் வரையில் இடையி லுண்டான இடுக்கண்களைக்கொஞ்சமுமெண்ணுமலே தம் முயற்சியி னின்றும் தளர்ந்தனரில்லை, எக்காரியஞ்செய்ய முயன்றாலும் இடை யூறு நேரிடுங்கால் பின்வாங்குவோர் அவ்வற்பரிலும் சிறந்தோர்; தலையிடுங்காரியத்தை எத்தகைய துன்பமுறினும் மனஞ்சலியாமல் முடிப்பவரே தீரராவர் அத்தகையோரே சான்றோரெனப்படுவர். அன்னவர் சமயத்தில் தரையிலும் படுப்பர்; நல்ல சயனங்களிலும் நித்திரை செய்வர்; சிலவேளைகளில் கந்த மூலங்களைப் புசிப்பர்; சில சமயம் நல்லுணவருந்துவர்; மரவுரிகளையாடையாயணிய நேரிட் டாலும் அணிந்து கொள்ளுவர்; கந்தல் துணிகளை யுடுக்க நேரிட் டாலு முடுத்திக் கொள்ளுவர்; பட்டு பீதாம்பரங்களையும் உடுப்பர்; உலகதூஷணை பூஷணைகளையும் சமமாய்ப் பாராட்டுவர்; அவர்கட்கு சம்பத்து விபத்திரண்டு மொன்றேயாகும்.

"பூமியினருமையும் பொன்னினதருமையும், மனைவியினருமை யும், மக்களினருமையும், உடற்குறுமிடுக்கணு முருத நங்நலமும், காலத்தருமையும், கருதாராகி

'எல்லாம் வல்ல இறைவனே போன்று துன்புறு வோர்க்குத் துணைநின்றுதவித் தன்னுயிர் போல மன்னுயிர் புறக்கும் மன்னவன் பொருட்டும் மனமகிழ்வுடனே பொது நலத்திற்கும் புகழத்தகும் விதம் உயிரையே கொடுத்தும் ஊழியஞ்செய்வர்."

என்றபடி, சான்றோர்கள் சுய நலங்கருதாராகி பொது நலங்கரு தியே விடா முயற்சியாய் நின்று பிடிவாத ஹடத்தைச் சாதித்து உல குக்கே நன்மை புரிவார்கள். இது விசேஷமாய் யோக நிஷ்டர்கட் கே ஏற்றதன்றி, ஏனையோர்கட்கு சாத்தியமாவதன்று. யோகநிஷ்டர் களென்றால் முற்றுந்துறக்க வழிதேடுகிறவர்கள், அதாவது அரும் பொருளென பிரமஹத்தினிடத்தில் சேர அல்லது ஐக்யப்படயத்னம் செய்கிறவர்கள், யுஜ், என்ற தாது (root) விலிருந்து யோகமென் பதுண்டாயிற்று.

இவ்வண்ணம் நாமெழுதிக்கொண்டு போவோமானுல் இதைவா சிக்கும் ஆண் பெண் பாலராகிய சிறுமி சிறுவர்கள், கற்றோர்கள், மற்றவர்களாய் எல்லவருக்கும் விஷயசூசகமாகமட்டில்லாமல் திருஷ் டாந்த பூர்வமாயிருக்கும்படி, நாமெடுத்தெழுதும் விஷயத்தையே விரதமாய்க் கொண்டு நடித்து காட்டியருளிய பெருந்தகையாளரின் சரிதங்களிலிருந்தும் செவிகட்கின்பமளிக்குமாறு எமது சிற்றறிவிற் கெட்டியமட்டில் சிலவற்றைக் குறிப்பாய்ச் சொல்லத்துணிந்தனம்.

ஸ்தாவரங்களாகிய கதலி, மா, பிலா இம்மூன்று வகைத்தான விருக்ஷங்களும், சுவையுள்ள கனிகளைச் சுமந்து பிறர் கொண்டு உண்ணும் பொருட்டுத் தாழ்கின்றன. இம்மூவகைக் கனிகளையே முப்பழங்களென உலகினர் கூறுதல வழக்கம். மற்ற கனிகளைக்கொடுக்கும் மரங்களும் உண்டு. அவைகளும் அவ்வாறே தாழ்கின்றன. முகிற் கூட்டங்கள் நன்னீர் கொண்டுலாவிப் பூமியில் பொழியுமாறு பரவுகின்றன. இவ்வாறு மேலோர் எல்லா நலனும் நிறம்பப்பெற்றும் தீக்குணம் சற்றுமிலாதவராய்ப் பிறருடைய துன்பத்தைக்கண்டு மனஞ்சகிக்காமல் தாமே யாவரிடஞ் சென்று உதவுகின்றனர். இவ்வாறு அவர்கள் செய்வது கைம்மாறு கருதியோ? அன்று கையானது புகழ் கருதியோ நாவினுக்கினிய வுணவளிப்பது? அன்றி மெய்யின் மீது தாக்கற்கு வரும் தடியின் னடியைத்தடுப்பதற்கு கை சென்று தாக்குதல் போல் மேலோர் தாம் வருந்தினும் பிறர்க்குறும் இடுக்கணைக்களையும்படி போகின்றனர். இம்மட்டேயோ, தமக்குத் தீங்கிழைப்பவருக்கும் நன்மையையே நாடிச்செய்கின்றனர். நகரைவிட்டோட்டிய மாற்றாந்தாய் சுருசியை துருவனும், கைகேயை ராமச் சந்திரனும் புகழ்ந்தனரே! உலகில் மாந்தர் தன்னை வெட்டி வீழ்த்துந் தனையும் மரமானது, குளிர் நிழலைத்தந்தன்றோ உதவி புரிகின்றது. மரங்கள் கனிகளை ஈவதும், நதிகள் பெருகுவதும், பசுக்கள் பால் கறப்பதும், பரோபகாரத்தின் பொருட்டேயாதல் போல, நமக்குச் சரீரம் அளிக்கப்பட்டதும் பரோபகாரத்தின் பொருட்டேயாமெனக் கருதல் வேண்டும். அறிவும், கருணையும் வாய்ந்த மகான்களுடைய கையானது ஈகையினால் விளங்குமே யல்லாமல் கடககங்கணங்களணிந்து பொலிவுறுதலாலன்று. அங்ஙனமே அவர்களும் பரோபகாரத்தினால் விளங்குவரேயல்லாமல் தம் தேகத்தில் நறுமணங்கமழும் பூச்சுகளால் விளங்கார் மேலோரெனப் படுவோர் சுயகாரியத்தைக் கனவிலுங்கருதார்.

சுகதுக்கங்களைச் சமமென்றெண்ணிப் பொது நலங்கருதி சத்திய விரதத்தையே உலகினருக்கு நன்கு விளக்கிக் காட்டியவர் சூரிய குலத்துதித்த தோன்றலாகிய துந்துமாரன் என்கிற ஹரிசசந்திர மகாராஜனேயன்றோ அவர் சத்தியத்தில் நிஜநேசம் வைத்து உண்மையான தைரியத்தையும், முயற்சியையும் கைவிடாதவராய் தம் மனதை ஒரு வழியிலிறுத்தி சத்தியம் என்பதின் அரிதான பிரயோஜனத்தை சூரிய சந்திரர்களுள்ளளவும் தம் பெயரும், கீர்த்தியும் ஸ்திரமாய் விளங்கும்படிசெய்த பரமதீர ரன்றோ! அவரையே சத்திய ஹரிச்சந்திர ரென இன்னும் சொல்லிக் கொள்ளுகிறார்கள். அன்னவர் தம்மைப் படாத பாடும் படுத்திவைத்த விசுவாமித்திர மாமுனிவரிடம் சிறிதுஞ் சீற்றமிலாது மிகுந்த சாந்தத்தாலேயே, தம் நாடிழந்து, நகரிகழந்து, கொடிய கானகம் புக்கி சகிக்கொணாப் பல துன்பங்களை யடைந்து அக்கியில் பட்டுத்தப்பி, நன்மனையாளையும் அரிய

சுதனையும் அந்தணனுக்கு விற்று, புலையனுக்குத் தாம் அடிமையாகி சுடலைக்காத்து, அரவம் தீண்டி மாண்டமகனைச் சுட்டெரிக்கவெனக் கொணர்ந்த சந்திரமதியை முழத்துண்டும், அரியும் காசுமிலாது பிணத்தைச் சுடாது நிராகரித்துத்தள்ளிப் பின் கொலைகுற்றத்துக்காளாய் வந்த உத்தமியாம் தம் இல்லாளை வாளை யோங்கி வெட்டிய காலையில் மும்மூர்த்திகள் தோன்றி அனுக்கிரகிக்க, மாண்ட மகன் உயிர்பெற்றெழவும் அந்தணன் புலையன் முதலாயினோர் விண்ணவரென மாறி நன் மொழி பொழியவும் மீண்டும் தம் அருந்தவச் செல்வன், பத்நி இவர்களுடன் தம் நகரஞ் சென்று ராஜ்ய சம்பத்தனத்தையும் பெற்று சதிய விரதந்தைசிய நிலை நிறுத்திக் கீர்த்திமானய் விளங்கினுரென்று இன்னும் அந்த மகாராஜன் பெயர் நன்கு விளங்கிக் கொண்டிருக்கின்றதே ! சத்திய விரதமாம் சிரந்தமோர் தவத்தில் மனதைச்செலுத்திவந்த அந்த மகாராஜனை, தகாததான துளிப்பொய்யைச்சொல்லும்படி வற்புறுத்திய மாமுனிவரதுமொழியைச்சிறிதும் அவர் செவியில்கேளாது பதி யிழந்தனம், பாலனை யிழந்தனம், படைத்த நிதியிழந்தனம், கதியிழக்கினும் கட்டுரை யிழக்கிலேம்" என்று சத்திய விரதத்தையே யன்றோ மன உறுதியுடன் நின்று சாதித்தனர். (தொடரும்,)

துறையூர், மா. சுப்பருமய்யர்.

அயல்மனைவிரும்பேல்.

எனது அன்பு நிறைந்த சகோதரர்களே !

இப்பூவுலகின்கண் நாம் மானிடராய்ப் பிறந்து நாம் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்து, மற்றொருவருக்கு விரோதியாக எண்ணப்படாமலிருப்பது நம்முடைய முக்கிய கடமையன்றோ.

நாம் மற்றொருவரால் விரோதியாக எண்ணப்படுகிறது அயல் மனைவிருப்பல் என்பது ஓர் முக்கியமான கொடூரசெய்கை.

அயலான் மனைவியை இச்சிக்கிறது, உயிர் மோசத்துக்குள்ளாக்கும், தீய செய்கைகளை யெல்லாம் கொடுக்கும், அழகைக்கெடுக்கும், ஐசுவரியத்தை தோற்கடிக்கச் செய்யும், நீங்சாநரகத்திற்காளாக்கும்.

தல்லைமாறவாத பெண்டிரைவிட்டு அயல் மனைச்கு ஏகுதலும் நீச ஜாதி ஸ்திரீகளை சேர்க்கிறதும், கற்புள்ளமாதர்களைக்கெடுக்கிறதும் நம்மில் பெருந்துன்பத்தை விளைவிக்குமென்பதற்கு ஐயமில்லை. நாம் சாஸ்திரங்களின் மூலமாய் இந்திரன் கௌதமரிஷியினுடைய பத்தினியான அகலிகையின் கற்பை அழித்ததினல் அன்னவளின் சாபத்தால் தன்னுடைய அங்கத்தில் ஆயிரம் யோனிகளுடையவனு

ஞன். முன்னாள் இலங்கையில் ராவணன் சீதையை யிச்சித்து தன் நாடு, நகரம், பந்து, மித்திரர்கள் ரத கஜ துரக பதாதிகளென்ற நால்வகைச்சேனைகள், ராஜ்யம், உயிர் முதலிய வற்றை யெல்லாம் இழந்தனன். சந்திரன் தன்குருபத்தினி தாரையை இச்சித்ததினால் அவனடைந்தபாடும் தெரிந்த விஷயமே.

இன்றும், பெண்களும் அதற்கிணங்கி; தன் கணவன் தவிற அயலானை இச்சிக்கிறவள் மீளா நரகத்திற்காளாவாள்.

இதைக் கண்ணுரும் சகோதர சகோதரிகளே புருஷர்கள் தம்முடைய மனையாள்களையுமின்றி மற்றவர்களை நம்முடைய சகோதர சகோதரிகள் என்று பாவிக்கவேண்டிய தவசியம். குற்றத்தை நீக்கி குணத்தைக் கைக்கொள்ளுதல் கற்றவர்க்குற்றகலைகள்.

A. S. T. மஹாராஜ.

யூனியன் போர்ட்டு ஆபீஸ். சுருண்டை.

' வைகரைத் துயிலெழு "

இப்பூலோகத்தில் ஒவ்வொருவரும் காலையில் சூரியன் உதிப்பதற்கு முன் நித்திரைவிட்டெழுந்திருப்பது; தேக ஆரோக்கியத்திற்கு ஏற்றது. ஒரு நாளெல்லாம் மனம்போனவாறாக தேகமுயர்ச்சியாலும், மூளையாலும்; மனதாலும் பலவாறாக உழைத்து, உழன்றபின் இறவில் அயர்ந்து நித்திரை செய்யவேண்டிய அளவு ஆசோதைத் தந்தபிறகு அதிகாலையில் எழுந்திருப்போமாகில் மனம் தெளிவாக யிருக்கும. மாணாக்கனொருவன் நித்திரைபோவதற்குமுன் இரண்டு மூன்று மணிநேரம் கஷ்டப்பட்டு வரசித்தபோதிலும் மனதில் பதியாதபாடத்தை அதிகாலையில் வாசிப்பானாகில் அரைமணிநேரத்திற்கெல்லாம் மனதில நன்றாய் பதிந்துவிடும் என்பதை எல்லோரும் அறிந்த விஷயம். சிறுவர்களும் நடுவயதுடையோர்களும் வயோதிகர்களும் உஷஸ்காலத்தில் எழுந்திருக்கும் வழக்கத்தை அநுஷ்டிப்பார்களானால் அது அவர்களுக்கும் பெருநன்மையையும் தேகாரோக்கியத்தையும், அபிவிருத்தியையும், செய்வதேயல்லாமல் அவரவர்கள் வாழ்நாளையும் விருத்திசெய்யும்.

எவர்காலையில் ஐந்துமணிக்கு மேற்பட்டு நித்திரை செய்கிறாரோ அன்னவரை பிணியாளரென்றே சொல்லவேண்டும். இதை உத்தேசித்துதான் தேவாராதனை, ஈஸ்வரஉபாசனை முதலியவைகட்கு மனம் மிகவும் நிர்மலமாய் இருக்கத்தக்க காலம் உஷஸ்காலமே உசிதமானது. என்று எண்ணி இவ்விஷயத்தை அநேகயுகங்களுக்கு முன்னரே நமது ஆன்றோர் வெகு நன்றாய் அறிந்திருக்கிறார்கள். தேவாரம், திருவாசகம், திருப்பள்ளி எழுச்சி, திருவெம்பாவை ஆகிய

இவைகளை ஈஸ்வரசன்னிதானத்தில் ஓதுவதென்னும் உஷஸ்கால தேவாராதனை ஏற்பாடே சாட்சியாகும்.

முதல் முதல் அதிகாலையில் படுக்கையை விட்டு எழுந்திருப்பது மிகவும் கஷ்டமான செய்கையே? அயர்ந்து நித்திரையில் இருப்பவனை நாம் எழுப்பினோமானால் அவனுக்கு அடங்காத பெருங்கோபம் உண்டாகும். ஆயினும், நாளேந்து நாளைக்கு அவ்வாறு உஷஸ்காலத்தில் எழுந்திருக்க பழகிக்கொண்டால் பிறகு அவன் மிகவும் சுகத்தை அடைவான். பிரதானமாக உஷ்ண பிரதேசங்களில், அதிகாலையில் நித்திரையைவிட்டு எழுந்திருந்து நாற்பக்கமும் விருக்ஷவர்க்கங்களின் பசுமையும் பயிர் பச்சைகளின் பசுமையும் புள்ளினங்களின் இனிய ஓசையும், குளம், குட்டை ஏரி, நதி, சமுத்திரம் முதலிய இடங்களின் அருணோதயயொலியை கண்டமாத்திரத்தில் ஆனந்தமுண்டாவதுமன்றி பசுமை ஒளியினால், கண்ணிலுள்ள ரோகங்கள் நீங்குமென்று கற்றறிந்தவர்கள் கூறுகின்றனர்.

பித்த சம்பந்தமான தேகமுடையவர்களுங்கு அதிகாலையில் எழுந்திருக்கும்போது ஆரம்பத்தில் பித்தநீரானது அதிகரித்து, ஓர் விதமயக்கமும், படபடப்பும், தலைநோயும் ஒரு வேளை உண்டாகக் கூடும் அவ்விதம் உண்டானாலும் இடைவிடாமல் அதிகாலையில் எழுந்திருந்து ஸ்னானம் பண்ணிக்கொண்டே வந்தால், அவர்களுடைய பித்தரோகம் அவர்களிடத்தில் இல்லாமலே போய்விடும். ஆனால் அதிகபாலியர்கள் நெடுநேரம் வரையில் தூங்கவேண்டியது அவசியம் அதனால் அவர்களை வெகுசீக்கிரம் உறங்கச்செய்து அதிகாலையில் தாமே எழுந்திருக்கும்படிசெய்வது உசிதம்.

தேகாரோக்கியமும் சுருசுருப்பும் பெற்றுத்தமக்கு பெரும் பயனை தொடுக்கத்தக்க நற்காரியங்களில் பிரவேசிக்க இஷ்டமுடைய சற்புருடர்கள் யாவரும் "வைகரத்துயிலெழு" என்ற அம்மையார் கூறிய அமுதவாக்கை கடைபிடித்தொழுகவேண்டும். பட்சிகளும்; மிருகங்களும் வைகரையில் எழுந்து தங்கள் தங்கள் வேளைகளை செய்ய தொடங்குமெனின் அறறிவுடைய நம்மக்கள் வைகரையில் துயிலெழுவது அவசியமன்றோ? சா. ரு. சொக்கலிங்கம் பிள்ளை

பொருள் வைத்தச்சேரி.

கல்வி.

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சைபுகினுங்கற்கை நன்றே"

கல்வி:—அறிவை விசாலிப்பது கல்வி. நல்லதன் நலனையும், தீயதன் தீமையையுமறிந்து கொள்ள அறிவு அவசியம். அவ்வறிவைப் பரவச் செய்வது கல்வி. விலங்கின் தன்மைகளை நீக்கி மனிததன்மைகளைத் தரத்தக்கது கல்வி. என்றுமழியாத வஸ்து கல்வி. அழகிற் சிறந்தது கல்வி.

"குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சளழகு மழகல்ல நெஞ்சத்து
நல்லம்யாமென்று நடுவு நிலைமையாற்
கல்வியழகே யழகு"

கற்கவேண்டியவை:—

"அவகுசால் கற்பின் அறிவு நூல் கல்லவா
துலகு நூலோதுப வெல்லாங்-கலகல
கூவுந் துணையல்லாற் கொண்டு தடுமாற்றம்
போலுந் துணையறிவாரில் (நாலடியில்.)

என்றபடி ஒருவன் கல்விகற்க வேண்டியவை யாவை? எனில் அறம்பொருள் இன்பம் வீடு என்ற நால்வித புருஷார்த்தங்களை அளிக்கக்கூடிய நூல்களையும், ராஜநீதிகளைப் புகட்டக்கூடிய நன் நூல்களையும் கற்கவேண்டும், தற்காலத்தில் "ஆங்கிலபாஷை" எங்கும் பரவி உள்ளது அதனல் ஏதேனும் நமக்கு நற்பயன் உளதோ குழந்தைகளை பள்ளிக்கூடங்களில் வைத்தவுடனே, முதல் பாரத்திற் குறிய (I Form) மிருகங்களின் தன்மைகளைப்பற்றிக் கூறுகின்ற னவே ஒழிய நமது தமிழ் புத்தகங்களும், புராதன காலத்திலேற் பட்டதுகளும், தற்காலம் அலட்சியத்தினுலும் ஆதரவில்லாததினு லும் குன்றியிருப்பதுவும், இனிமேல் ஓங்கி நிற்கப்போகிறதும், என் றும் பதினறுவயதுகள்போன்ற ஆத்திச்சூடி கொன்றைவேந்தன், நன்னெறி, வெற்றிவேற்கை, நல்வழிபோன்று எவை உள்ளன அவ் வாங்கிலத்தில் * "தொட்டிற்பழக்கம் சுடுகாடுமட்டில்" என்றபடிக்கு சிறுவயதிலேயே நாம் நீதிகளை புகட்டுவோமாகில், பிற்காலத்தில் யார் என்ன புகட்டினும், "சிறுவர்க்குக்கல்வி சிலையிலெழுத்து" என்ற படி. மாருது அக்கல்வி நிற்கும். ஆதலால் எடுத்தவுடனே நாம் குழந் தைகளை மிருகத்தைப்பற்றி அதிகமாகத் தெரிந்து கொள்ளவிடாது நீதிகளை புகட்டி நல்வழிக்குக் கொண்டுவருவோமாக.

கல்வியின் பெருமை:—இக்கல்வி நம்மைத்தீயாவழியிற்பிரகிவே சிக்காது தடுத்து நல்லவழியில் செலுத்தி மாட்சியளிக்கும். மற்றும்

"எக்குடிப் பிறப்பினும் யாவரேயாயினும்
அக்குடியிற் கற்றோரைவருகவெனுபர்"

என்றபடிக்கு உடலோழியும் குலச் சிறப்பினும் மிகச்சிறப் புடையது கல்வி.

ஸ்ரீ குமரகுருபரசுவாமிகளும்,

"அறம் பொருளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டு—முறங்கவலொன்.
றற்றுளியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க் குற்றதுணை"

என்றருளினர்.

கல்விகற்கும் முறை:— நாம் கல்வி கற்பதற்கு அதிக ஆசையுடன், விடாது ஊக்கத்துடன், தவருது, முதலில் கஷ்டப்பட்டாலும் கஷ்டத்தால் வரும், இன்பம் '' என்றபடிக்கு பின்வரும் இன்ப நன்மையைக் கருதிக்கற்கவேண்டும். ஆசிரியர்க்கு வணங்கி பயபக்தியுடனும் வினயத்துடன் கல்வி கற்கல் வேண்டும் கற்குங்கால் மனதை வேறுவிடயங்களிற் செலுத்துவது கூடாது இதைப்பற்றி யொருசிறு கதையுங் கூறுவதுண்டு.

அதாவது:—

காரிகை நூல் கற்கப்புகும் மாணுக்கனெருவன், அந்நூலை அதிக கவனமாக கற்றுவருங்கால் ஒரு நாள் உண்ணும் போது நெய்விடுதற்குபதிலாக அன்னத்தில் மறதியால் அவன் தாய் வேப்ப எண்ணையை விடுத்தனள். இவன்படிப்பிலேயே கவனத்தை செலுத்தினவனுதலின் அதை கவனிக்கவில்லை ஆஹாரம் அருந்திய பிறகு அவன் தாய் தான் செய்த மறதியை அறிந்து காரணத்தையும் தெரிந்துகொண்டு தினமும் அப்படியே செய்து வந்தனள். இவன் கோரிய எண்ணமும் முடிந்தது. காரிகைப்பாடம் முடிந்ததால் மனக்கவலையு மாறிற்று. வழக்கப்படி உண்ணும் போது, " அம்மா நெய்கசக்கிறதே " என்றுன் மகன். உடனே அவளும், அப்பா இன்றுதான் உனக்கு படிப்பும் கசந்தது போலும் " என்று இருவரும் நடந்த செய்தியையறிந்து பாடமுடிந்ததைப்பற்றி சந்தோஷமடைந்தனர்.

" கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்கவதற்குத் தக'' என்ற முறையைக்கவனித்து
கற்றவரையில் பிசகில்லாமல் கற்கவேண்டும்.

கற்றவரது சிறப்பு:—

"............வித்வான் ஸர்வத்ர பூஜ்யதே''

என்றபடிக்கும்,

" கண்ணுடைய ரென்பவர்கற்ருேர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர் என்றதனுலும் கற்றவரதுசிறப்பு நமக்கு இனிது விளங்குகின்றது. கம்பநாட்டாழ்வார் இதற்குப் போதிய உதாரணமாவர்.

கற்றவரது கடமை:---

" கற்றதனுலாய பயனென்கொல் வாலறிவ
னற்ருடொழா அ ரெனின்''

என்ற தெய்வப்புலமையின் திருவாக்கின்படி, கற்ருேர்,கற்றநூல்களின் கூறிய வொழுக்கங்களின் படி ஒழுகி உலகத்திற் சிறப்பித்திருக்கவேண்டும். எவைகளைப்பிறர்க்குப் போதித்து, உலகில் நன்மையை நாட்டவேண்டும்.

கல்லாமையின் இழிவு:—

கல்லாதவர் முகம் சுடுகாட்டை யொக்கு மெனவுக் கல்லாதவர் மூகத்திலுள்ள இருகண்களும் புண்களென்றும், கல்லாதவர் உருவம் மரம்போலு மெனவும், கற்றார் சபையில் கல்லாதவர் இருப்பது நாய் போன்றும்; கற்றார் சபையில் கல்லாதவர் பேசுவது நாய் குலைப்பது போன்றென ஆன்றோர் அறிவுறுத்தியுள்ளனர்.

அவைகளை,

" கற்றி லாய்கலை கற்றுணரார் முகம்
உற்று நோக்கின் மயானத்தை யொக்குமால்
.... "

" கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தேநிற்கு
மவையல்ல நல்லமரங்கள்—சபைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவனன் மரம்"

" கல்லாது நீண்ட வொருவ னுலகத்து
....—மெல்ல
விருப்பினு நாயிருந்தற்றே யிராஅ
துரைப்பினு நாய்குரைத்தற்று"

" கல்லாதமூடரைக் காணவு மாகாது
கல்லாத மூடர் சொற் கேட்கவுமாகாது
கல்லாத மூடர்க்குக்கல்லாதார் நல்லாராம்
கல்லாத மூடர் கருத்தறியாரே "

கல்வியாலடையுமின்பம்:—

(இம்மையிலின்பம்.)

" தொடங்குங் காற்றுன்பமாயின்பம் பயக்கும்
மடங் கொன்றறிவ கற்றுங்கல்வி "

" தாமின்புறுவதுலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்.

" அறம் பொருளின் பமும்......பயக்கும்.

(மறுமையிலின்பம்)

" அறம்.........வீடும் பயக்கும்.

" கற்பக் கழிமடமஃ குடமஃ கப்
புற்கந்தீர்ந்திவ்வுலகிற் கோளுணருங்- கோளுணர்ந்தாள்
றத்துவ மாய நெறிபடரு மந்நெறி
யிப்பாலுகத்திசைநி றீடியப்ப
லுயர்ந்த வுலகம் புகும் "

ஆதலின் நண்பர்கள் இத்தகையை மகிமையுள்ள கல்வியை இறைவனருளாலாதரித்தறிந்து கொள்ள மேன்மேலும் நாம் சர்வ சிருஷ்டிக்கர்த்தாவான சகல ரூபசம்பத் கருணாநிதியை போற்றுவோமாக. சுபம்!

ச. பஞ்சாப கேசய்யர்.

" லலிதா விலாஸ் மாயவரம்.

[காதலால் துக்கமுண்டு யீஸ்பரியால் நன்மையடைந்த]

சாந்தவதி

நமது கதையானது பூர்வீகத்தில் அதாவது கலியுகாதி (1795) வருடம் ஆரம்பமாகிறது.

புண்ணிய பூமியாகிய யிப்பரதகண்டத்தின் கண் மகா மகிமை பெற்றோங்கிய யமுனா நதியானது, கடலுடன் கலந்து சங்கமமாகும். சங்கமுகத்தின் வட பாரிசத்தில் அநேக வித நதிகள், மலைகள் வனங்கள் ஆரணியங்களும் குறையா நிறையப்பெற்றதும், லட்சுமி விலாசம் பொருந்தியதுமான குக-தர்மபுரமென்ற பெரிய நாடும், அந்நாட்டை பரிபாலித்து வரும் ராஜ்தானியாகிய ராஜன் வாழ்ந்திடும் ஈசபுரி யென்ற பெரிய நகரும் உண்டு. அந்த ராஜதானிக்கி தென்பாகத்தில் வாலைபுரம் யென்றோர் சிற்றூரும் அதையடுத்தாப் போல் கீழ்பாகத்தில் ஊரின் சேகரமன்னியில் கொஞ்சம்தூரம்தள்ளி சிர்ப்பசாஸ்திரவிதி குறையாது கட்டியமைத்த பெரியதோர் கட்டிடமும் அதைச்சுற்றிலும் கோட்டை திருமதில்களும் வெகு அழகாக கட்டப்பட்டிருந்தது அதனடுத்த மேல்பாகத்தில் இரண்டு நாளிகை வழிதூரம் சமசதுரமுள்ளதும் மல்லிகைமுல்லை யிருவாட்சி;சாமந்தி நந்தியாவட்டம் மரு மருக்கொழுந்து மந்தாரை முதலியன புஷ்பச் செடிகளும் மனோரஞ்சிதம் திருவாத்தி சண்பகம் வில்வம் பன்னீர் விச்சி முதலியன புஷ்பங்களைத்தரும் விருக்ஷங்களும், மா, பலா, கொய்யா, நார்த்தம், எலிமிச்சம் நெல்லி ஆரஞ்சு சீதா முதலிய கனி வர்க்கங்களை தரும் விருட்சசாதிகளும், அல்லி தாமரைகள் நிரைந்த யிரு தடாகங்களும் சிறு ரஸ்த்தாக்கால் பந்தடி மேடைகள் சிங்கார சாவடிகளும், அநேகவிதமான நார்க்காலிகள் யெங்குப் பார்த்தாலும் போடப்பட்டதுமான சிங்கார நந்தவனமும், அதனடுத்து பெரிய ஆரணியமும் பார்வைக்கி கெம்பீரமாகயிருந்தது,

கடகமாதம் ஒரு நாள் மாலைப் பொழுது அதாவது அஞ்ஞானமாகிய பாவ யிருளைப்போக்கி மோட்சமென்னும் ஒளியைத் தரவல்லவனாகிய சூரியபகவானானவர் தன்னுடைய ஆயிரம் கிரணங்களையும்

ஓடுக்கி மேற்றிசையடைய ஒரு நாளிகைப் பொழுதிருக்க மேற் சொன்ன கட்டிடத்தை யடுத்த நந்தவனத்தில் 16 அல்லது 17 வய துடையவளும் வாலிபர்கள் மனதை கொள்ளை கொள்ளும் வடி வமைந்தவளும் பூர்ணமதியை நிகர்த்த முகவிலாசமும் பத்தரை மாற்று பசும்பொன்னை யொத்த தேககாந்தியை யுடையவளுமான ஓர் மாதானவள் நந்தவனத்தில் கட்டப்பட்டிருக்கும் சாவடியை யடுத்தமேடையின் மேல் பாகத்தில் நின்ற மரத்தில் சாய்ந்த வண்ண மாய் துக்க சாகரத்துடன் உட்கார்ந்துக் கொண்டிருந்தாள்.

அது சமயம் அம்மாதையன்னியில் அங்கு வேறு யாரும்யிருப்ப தாக காணப்படவில்லை. ஆனல் நந்தவனத்தின் வெளிப்புரத்திலும் வாசலின் வெளிபாகத்திலும் மனிதர்கள் நடமாடுவதும் பேசுவதும் கேட்டது அதை யோசிக்க அவர்கள் அங்குள்ள காவலாளிகளும் வேலை ஆள்களும் என்பது நன்கு விளங்கிற்று மேற்சொன்ன மாதா னவள் யேதோ கவலையோடு யிருக்கிருள் யென்பது மட்டிலும் புலப் பட்டதே யொழிய அவளுடைய வியாகூலம் யின்னதென்பதுதெரிய வில்லை. கோடி சூரிய பிரகாசம் போல்விளங்கா நின்ற, அவளுடைய முகமானது வெகு நாள் கவலையடைந்தவள்போல் கருத்து பிரகாச மங்கி மூத்தாளுடைய வாசமடைந்தவளைப்போல் காணப்பட்டாள்.

அவள் அழும் கண்ணீரானது, தாரைதாரையாக வடிந்து உடுத்தியிருந்த புடவையை நனைத்து ஈரபுடவையாக ஒத்திருந்தது இப்பெண்ணனவள் அடிக்கடி நாலுபக்கங்களிலும் திரும்பிப்பார்ப் பதும், திடுக்கிடுவதும், சோர்ந்து கீழே விழுவதும், தேம்பி தேம்பி அழுவதையும் யோசிக்க ஆராத பெருந்துயரில் ஆழ்ந்திருக்கிருள் யென்பது நன்கு விளங்கிற்று.

அவள் படும் பரிதாபங்களை ஆயிரம் நாவைப்படைத்த ஆதி சேடனல் சொல்லமுடியாதென்ருல் ஒரு நாவைப்படைத்த யென்னல் சொல்லத்தரமாமோ அல்லது ஒருவாருக சொல்வோமென்ருலும் யென்னுடைய ஐம்புலங்களும் தடுமாடுகிறது. நான் வரையும் யெழுது கோலானது யென்னை யரியாமல் நழுவுகின்றது. நிற்க,

அம்மாது சிரோன்மணியானவள் தன்னுடைய ஐம்புலங்களை யும் பல வழிகளில் சிதரவிட்டு முணுமுணுவென்று யேதேதோ வாய்பிதற்றலினல் அவள் சொல்லும் வார்த்தைகளானது ஒன்ரு வது புலப்படவில்லை. ஆனல் ஒன்றுமட்டிலும் சற்று பெலமாக கேட்டது. ஏ நண்பரே! உன்னலல்லவா யென்னுடைய தாய் தகப் பன் தமையன் உற்ருர் உறன்முறையார் முதல் யெங்கள் நாட்டையு மிழந்து நானும் பரக்கெதிக்கி ஆளானேன் நீயாவது சவுக்கியமாய் யிருக்கின்ருயோ இல்லையோ யென்ருல் அதுசமயம் இவளுக்குபின்பு த்தில் இரண்டு சிம்மங்கள் வேகமாக வந்துக்கொண்டிருந்தது முன்

புரமிருந்து. ஓர் கிழமாதும் இவளைநோக்கி வந்துகொண்டிருந்தாள் சூரியபகவானும் இப்பெண் படும் பரிதாபத்தைக்கண்டு சகியாதவன் போல் மேற்கு திசையையடைந்தான். அந்தகாரமும் எங்கும் சூழ்ந்துக்கொண்டது. (இன்னும் வரும்;)

நா. சுப. சாமிநாத உபாத்தியாயர்.
பக்த கவி ஜோதிடர், மாந்தலே பர்மா.

சிறுவர்க்கான

பக்கங்கள்.

நாம் இருக்கும் தேசத்திற்கு இந்தியா என்று பெயர். ஔவையார் இருந்த காலத்தில் நம் நாட்டிற்கும் வெளிநாடுகளுக்கும் வியாபாரம் நடந்து வந்தது. அவ்வியாபாரத்தில் அநேக இந்தியர் பணக்காரர் ஆனார்கள்.

இதையெல்லாம் அறிந்திருந்தான் ஒரு பையன். அவன் ஏழையான தாய்தந்தையருக்கு ஜனித்தவன். மற்றவர்களைப் போலத்தானும் வியாபாரம் செய்து, சுகம் ஆக இருக்கவேண்டும் என்று அவனுக்கும் ஆர்வம் உண்டாயிற்று. அதனால் இவன், தன் தந்தையிடம் சென்று, தந்தையே! இக்குவலயத்தில், நாம் மிடியால் இடிக்கப்பட்டு மிகவும் துன்பம் எய்துகின்றனம். நன்மைப் போன்ற - ஏன், நம்மைக் காட்டிலும் – வறியோர் யாவரும், வியாபார விஷயமாக, வெகு பணக்காரர்கள் ஆய் எய்துகின்றனரே! அவர்கள் இயைய, அத்தம் அடைந்து, சுகம் உறவேண்டும் என்று எனக்கும் ஆவல் உறுகின்றது. ஆதலினால், ஐயா! தயவு செய்து தாங்கள் உத்திரவு தாரும். நான், திரைகடல் தாண்டி, திரவியம் தேடிவருகிறேன், பிறகு நாமெல்லாரும் சுகமாய்க் காலத்தைக் கழிக்கலாம், என்று கழறினான்.

அதனைக் கேள்வியுற்ற அவன் தகப்பன், "அருமருந்தன்ன குழந்தாய்! நீ சொல்லுவது சரிதான். ஆயினும், இது விஷயத்தில் ஔவைப் பாட்டியாரையும் நாம் கலந்து கொள்ளவேண்டும். ஏனெனில், அவர் இது விஷயங்களில் அதிக அனுபவம் அடைந்தவர். ஆகையினால் அவரைக் கேட்போம் கேட்டு, அவர் என்ன சொல்லு

கிறரோ அதன்படியே நடப்போம் என்று சொன்னர். பையனும் அதற்கு இசைந்தனன்.

அன்றுமாலே, அவர்களிருவரும் ஔவையார் இல்லம் ஏகினர். மூதாட்டியார், அப்பொழுது தான் தன் மாலே ஜெபத்தை முடித்து அமர்ந்து இருந்தார்.

அவர், உடனே எழுந்திருந்து, வந்த இருவரையும் உபசரித்து வந்தகாரணத்தையும் விசாரித்தார். அவர்களும் சங்கதியைச்சொன்னுர்கள். அதைக்கேட்ட ஔவையார் அன்னுரை நோக்கி ‘ அன்பர்காள் ! இவ்வுலகத்தில் உதிப்பவர்கள் எல்லாரும் சுகித்து இருப்பது இல்லே ஏனெனில் அவரவர், போன பிறப்பில் இயற்றிய பாவ புண்ணியங்கட்குத் தக்கவாறே சுக துக்கங்களேயும், அனுபவிக்கின்றனர். அப்படி இருக்க, ஒருவர் கொள்ளமுடியுமோ ? வெள்ளம் நிறைந்த வாரிதியையும் தாண்டி. வேண்டிய பொருள் தேடலாம் தேடியும், உடலுடன் வாழும் இவ்வுயிர் சுகமாய் இருக்கும் என்பது என்ன நிச்சயம் புதையலேப் பூதம் காக்கின்றது.

அது போல, அளப்பிலா அத்தம் தேடியும் சுகப்படாதபேர் எவ்வளவோ உண்டு. லட்சம், லட்சமாய் சம்பாதித்தவர்கள் எல்லாரும், ஒருவாய் அன்னம் அருந்தவும் இயலாதிருக்கின்றனர். இது எதற்குச் சொல்லுகிறேன் என்றுல், பணம் சம்பாதித்தால் தான் சுகமாயிருக்கலாம், என்று இருக்கும் உன் எண்ணம் சரியானதல்ல வென்று உறுத்துவதற்கே உரைத்தேன். இந்தப் பிறப்பில் சுகமாய் இருக்கவேண்டு மென்று நம் தலேயில் எழுதப்பட்டிருந்தால், எப்படியும் சுகமாகவே இருப்போம். இதற்காகப் பேசாமல் இராதே ! வியாபாரம் செய்யவேண்டாம் என்று நான் சொல்லவில்லே. ஆனல் நான் சொல்வது என்ன வென்றுல், ‘ குவலயத்தில் உடலோடு வாழும் உயிர்க்கு, போன ஜன்மத்தில் செய்திருக்கும் பாவபுண்யங்களுக்கேற்ப உள்ளது ஒழிய, ஒருவர்க்கு, இன்னும் ஒருவர் சுகம் கொள்ளக்கிடையாது. அப்படி இருக்க, வெள்ளக் கடல் தாண்டி ஓடி, அவ்விடங்களில் பணம் சம்பாதித்து, உயிருடன் மீண்டு, சுதேசக் கறை ஏறினல் என்ன சுகம் அதிகமாய் உண்டாகி விடப்போகின்றது ? என்று தான், என்று கூறினர்.

பையனும் ஆம் – ஆம் என்று தலேயை அசைத்து, தான் கொண்ட எண்ணம தவறு என்று உணர்ந்தான். கூட, கடலோடி, கனபணம் தேடி, மீண்டு கரை ஏறும் எண்ணத்தையும் தவிர்த்தான்.

தகப்பனும், தன் அந்திய காலத்தில், தனயன் தன்னே விட்டு விட்டுப்போய் விடமாட்டான் என்று சந்தோஷம் அடைந்தான். தன் சந்தோஷத்தை வெளிக்காட்டுவதுவே போல், ஔவையாரைப் பன்முறையும் வணங்கி வலம் வந்தான்.

அப்போது ஔவையார் அவனை விளித்து, அன்பனே ! நான் சொன்னது உன்மைந்தன் மனத்தில் பதிந்திருக்கும் என்றே எண்ணுகின்றேன். ஒரு வேளை, மறந்து, மறுபடியும் வெளியேகிச் சுகமடைய விரும்பி உத்தரவு கேட்டானேயாகில்

'உள்ளதொழிய ஒருவர்க்கொருவர் சுகம்
கொள்ளக் கிடையா குவலயத்தில்—வெள்ளக்
கடலோடி மீண்டு கறைஏறினலென் ?
உடலோடு வாழுமுயிர்க்கு ?

என்று கேள், அடங்கிடுவன்," என்றறைந்தனர்.

கேட்ட தந்தை களிப்பெய்திக் தநயனுடன் இல்லம் ஏகி இன்புற்று இருந்தனன்.

தான் குறித்துவைத்த எத்தனையோ செய்யுட்களுடன் இதனையும் குறித்து வைத்தார் நமது பாட்டி.

லால்குடி, சே. கந்தசாமி,
தமிழ்-ஆசிரியன், குடியாத்தம் [வட ஆற்காடு ஜில்லா.]

சுலோசனை

(118 ம் பக்கத் தொடர்ச்சி.)

காலாந்தகனே ராமனாய்வந்திருக்கின்றனன் போலும்-கொடிய காலம் ! என்ன செய்யலாம் ! வருவன வந்தேதீரும். (பரிதவிக்கின்றனள்.)

(ராவணன் மண்டோதரியின் வார்த்தைகளைக் கேட்க மனஞ்சகியாதவனாயினும், கொஞ்சம் வெட்கி, தலைகுனிந்தபடி தன் இல்லாளைச் சமாதானப்படுத்தும் பொருட்டு, நல்ல பார்வையாய்ப்பார்த்து மொழியுங்கால் இந்தரஜித் பிரவேசிக்கிறான்).

ராவ: அடி, பிராணசகி ! நின்னைப் போன்ற அறிவிலை பேதப் பெண்மணியான சுத்த மடமை வாய்ந்தவளை நானென்றும் எங்குங்கண்டதேயில்லை. கேவலம் இப்படி மனதை சலிக்கவிடலாமோ ? இதோ பார் நின்மகன்.

(அப்பொழுது அங்கு தோன்றிய இந்தரஜித் தந்தையரை வணங்கி நமஸ்கரித்து நிற்றல்) அப்ப ! கண்மணி ! நின் மாதா மிகவும் அதைரிய முற்றுக் கலங்கித் தியங்குகின்றனள். நான் சொல்லுந்தைரிய மொழிகள், இவள் செவியில் ஏறவில்லை. நீ சென்று வந்த வரலாறனத்தையுங் கூறு, கேட்போம்.

மே: தாதையர்காள் ! இராக்ஷத படைகட்கும் லக்ஷமணரை முன்னிட்ட வானரப்படைகட்கும் போர் வலுத்தது. ஜயம் அபஜயம் இன்னாருடைய தென்றறியக் கூடாதபடி போர் செய்தேன். மாயா:சீதையின் தலையை வெட்டி யெறிந்தேன். ராமன், லக்ஷமணன்

இவர்களை மயங்கித் திகைக்குமாறு செய்தேன். கடைசியில் ஆபிச்சாரகிரமப்படி நிகும்பிலையில் மகவொன்றியற்றியும் பார்த்தேன். அது முடிவு பெறுவதற்குள்ளாக எதிரிகள் செய்த கோலாகலம் செப்பத்தரமல்லை. யாகம் முடியவில்லை. சாரதிமுடிந்தனன், ரதம் நொருங்கியது, கவசம், பரிகள், படைகள் யாவும் போயின மாயையில் மறைந்து எதிரிகள் நோக்கா வண்ணம் இவணுற்றேன். சுலோசனையைக் கண்டேன். தங்களிருவருடைய ஆசீர்வாதங்களைப் பெற்று நல்லசாரதியுடன் நவீன பரிகள்பூட்டிய ரததில் அருபத்திய கவசம் பூண்டு இன்றுகாலையில் சூரியன் உதயமாவதற்குள்ளாகவே போர்களம்புக்கி, வாநரப்படைகளைச் சிதறவடித்து மாய்த்தும், ராமலட்மணரைக்கொன்றும், அவர்களுடைய உதிரத்தை பானம்பண்ணிக்கொண்டு ஜயப்பிரதாபத்துடன் வருகின்றேன். கவலைசிறிதும் வேண்டாம். ஜயாபஜயம் ஒருவர் பங்கில்லை நேற்று ஜயம் எதிரிகளுடையதாயினும், இன்று ஜயம் நம்முடைய தென்றே உறுதிகொள்ளுங்கள் செல்லவிடைகொடுங்கள்.

மண்: பிராணநாத ! காலத்தின் கொடுமைகளைப் பார்த்தீர்களா? மகாவீரனான நம்மருஞ்செல்வன்-இந்த என் தனயன் போர்முனைக்குச் சென்று, இன்று வந்திருக்குங்கோலத்துடன் எப்பொழுதாவது கண்டிருக்கின்றேமோ ? இந்த விபரீதத்தை நேரில் கண்டும்(பயந்து) உங்கள் எண்ணத்தைச் சாதிக்கமுயல்கின்றீர்களே ! முடியாது, முடியாது ! ஆதலால் பேதைச்சொல் அம்பலமாகாமல சீதையை அவளுடைய பர்த்தாவிடம் கொண்டுபோய் சமர்ப்பித்துவிட்டு, இறந்து போனவர்கள் போக மீந்திருப்பவர்களாயினும் க்ஷேமமாயிருக்கப் பாருங்கள் எல்லாமறிந்த பெண்பாலாகிய நான் இதற்குமேல் என்ன சொல்லத்தக்கது. தாங்கள் பிடிவாதமாயிருந்தால், வலிதாகிய காலத்தின் கொடுமையை மாற்ற எவரால் முடியும் ?

ராவ: பிராணசகி ! உன்மகனுடைய வீரதீர பராக்ரமங்களையெல்லாம், மறந்து பேசுகின்றனை நானும் என்மகனும் பெற்றிருக்கும் வெண்மையும், விசாலமுமான கீர்த்தி பராக்கிரமம் இவைகளை வீணாக்கி, மானமிழந்து, அதமமான மானிடர்களைப்போய் சரண்புகுமாறு பணிக்கின்றனைபோலும்சபாஷ் ! அறிவிலி ! இம்மதி பயந்த பெண்மணிக்குறியதேயன்றி, சுத்த வீரர்களாகிய புருஷர்கள்ஏற்றுக் கொள்ளத்தக்கதோ ? அம்மானிடர்களின்வீரச் செய்கை எத்தகைத்தாயினும், போருக்குச்சென்று ஜயம் பெறுதல் அல்லது சுவர்க்கமடைதல் இவைகளைத்தவிர வேறுவித வழியொன்றும் என்புத்திக்கெட்டியமட்டில் தோன்றவில்லை, வீணான நின்உபதேசம் ஏன் ? பேதாய் ! (வீராவேஷங்கொண்டு நிற்கும் மகனைப்பார்த்து வீராவேசத்துடன்) என், செல்வமே ! கண்மணியே ! நீயன்றோ என் நன்மகன். ஜயவிஜயீபவ ! (இன்னும் வரும்.)

துறையூர் சுப்பராமய்யர்.

ரக்தாக்ஷிவருஷத்திய ரஞ்சிதபோதினியின்

திருக்கணித சர்வ முகூர்த்த பஞ்சாங்கம்.

கலியுகாதி 5026—சாலிவாகனம் 1847—பசலி 1333—ஹிஜரி 1342,

கொல்லமாண்டு 1099—1100, இங்கிலீஷ் **1924**௵

வைகாசி௴	மே௴ ஜூன்௴	வாரம்	திதி.	நக்ஷத்திரம்.	யோகம்.	விசேஷங்கள்,
1	14	புத	தச32-3	பூரம்14-0	அமி60	அசுவம்மாடுவாங்க
2	15	வி	ஏகா27-23	உததிர11-43	ம11-43சி	சர்வமத் ஏகாதசி
3	16	வெ	து20-48	அஸ்த 7-40	அ7-40சி	பரசுராம துவாதசி
4	17	சனி	திர12-43	சித்தி 1-58	ம1-58 அ	நரசிம்மஜயந்தி
5	18	ஞா	சது3-43	சுவாதி55-8	ம 60	பௌ-கௌரிவிரதம்
6	19	திங்	○ 54-0	விசாக47-33	சித்60	அர்த்தநாரீசுவரவிர
7	20	செ	பிர44-13	அனு39-43	ம32-10அ	கஞ்சி கருடசேவை
8	21	புத	துதி34-35	கே32-10	ம25-25அ	கரிநாள்
9	22	விய	திரி25-50	மூலம்25-25	சி60	மிதுனயனம்
10	23	வெ	சது18-18	பூராட19-50	சி15-55 ம	சதுர்த்திஸ்ரார்த்த
11	24	சனி	பஞ்18-18	உத்ரா15-55	சித் 60	விவாகம்காலே7—ம
12	25	ஞா	சஷ் 8-3	திரு13-43	ம13-25சி	யாத்திரைசெய்ய
13	26	திங்	சப் 5-40	அவிட்13-25	சித் 15-0ம	கஞ்சிவரதர் தீர்தம்
14	27	செ	அஷ்5-20	சதை15-0	ம18-15 அ	பிரயாணம்விலக்க
15	28	புத	நவமி6-33	பூரட்18-15	சி22-55 ம	அக்நிநட்சத்திரம்
16	29	விய	தச9-28	உத்தி22-55	சி28-43அ	தானியம்செலவிட
17	30	வெ	ஏகா12-28	ரேவதி28-43	அ35-18சி	கரிநாள்
18	31	சனி	துவ18-25	அசுவ38-18	சி42-25அ	கரிநாள்
19	1	ஞா	திர23-53	பரணி 42-25	சித்60	மாசசிவராத்திரி
20	2	திங்	சது29-45	*கிருத்49-48	அமி60	கிருத்திகை
21	3	செ	●அ35-48	ரோக57-13	சித்60	அம அரச பிரதக்ஷ
22	4	புத	பிர41-43	மிருக60-0	சித்60	ஜெஷ்டசுத்தம்
23	5	விய	துதி47-28	திருவா11-40	ம11-40அ	சந்திரதரிசனம்
24	6	வெ	திரி52-50	புனர்18-13	சி 18-13ம	ஸ்வர்ண கௌரிவிர
25	7	சனி	சது57-20	பூசம்23-55	சி23-55 ம	மாசசதுர்த்திவிரத
26	8	ஞா	பஞ்60	ஆயில்28-33	சி 28-33ம	திருதினஸ்பிருக்
27	9	திங்	சஷ்3-3	மகம்31-40	ம31-40சி	சஷ்டி நவக்கிரகசா
28	10	செ	சப்3-38	பூரம்33-8	சி33-8 அ	அரண்ய கௌரிவிர
29	11	புத	அஷ்2-18	உத்32-43	அ32-43ம	பிரயாணம் விலக்க
30	12	விய	ந59-3த53	அஸ்த30-28	சித்60	அவமாகம்
31	13	வெ	ஏ47-2058	சித்26-23	சித்60	தசராவிரதம்